Registered as a News Paper

# மன்னா

பொழிவு - 13
குவிப்பு - 05
பக்கங்கள்- 12
விலை ரூபா 30.00
மே 2010
(ISSN 1800-2641)

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

"Registered in the Department of Posts of Sri Lanka under No. "QD/109/News/2010"

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ Fax No - 023-2251161, E. Mail : sdmlogu@gmail.com, benoalexander@yagoo.com

# இலத்தீன் அமெரிக்க மண்ணில் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர்

## பிரேசில் நாட்டிற்கான தனது முதல் திருப்பயணம்



திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் உலகில் கத்தோலிக்கர்களை அதிகமாகக் கொண்ட பிரேசில் நாட்டுக்கான தமது ஐந்து நாள் திருப்பயணத்தை மேற்கொண்டார். உலகில் ஏறத்தாழ 110 கோடி கத்தோலிக்கரின் தலைவரான திருத்தந்தை 2005ம் ஆண்டு பணியேற்றபின் இலத்தீன் அமெரிக்காவுக்கென அவர் மேற்கொண்ட முதல் திருப்பயணம் இதுவாகும். உலக கத்தோலிக்கரில் ஏறத்தாழ பாதிப்போர் வாழும் இடம் இலத்தீன் அமெரிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் மெக்சிக்கோ நகரில் கருக்கலைப்பு சட்டரீதியாக அங்கிகரிக்கப் பட்டது பற்றிய நிருபர்களின் கேள்விக்கு திருப்பீடப் பேச்சாளர் இயேசு சபை அருட்தந்தை பெதரிக்கோ லொம்பார்தி பதிலளிக்கையில் கருக்கலைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் அரசியல்வாதிகள் நற்கருணை உட்கொள்ளக்கூடாது.

ஏனெனில் அப்பாவிக் குழந்தைகளைக் கொல்லும் செயலைச் செய்வதும் கிறிஸ்துவின் திருவுடலை உண்பதும் ஒன்றுக்கொன்று முரணானது. எனவே இவ்வாறான அரசியல்வாதிகள் நற்கருணை உட்கொள்வதிலிருந்து விலக்கப்படுகிறார்கள் என்றார்.

அங்குள்ள இளையோரை சந்தித்தது திருத்தந்தையின் பயணத்தின் முக்கிய நிகழ்ச்சியாக இருந்தது. பிரேசில் நாட்டின் மக்கள் தொகையில் ஏறக்குறைய பாதிப்பேர் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முத்திப்பேறு பெற்ற பிரான்சிஸ்கன் துறவி கல்வாவ்வை புனிதர் நிலைக்கு உயர்த்துதல், ஐந்தாவது இலத்தீன் அமெரிக்க கரிபியன் ஆயர் பேரவையை தொடங்கி வைத்தல் என்பன திருத்தந்தையின் இத்திருப்பயண நோக்கமாயமைந்தது.

## பெரிய குஞ்சுக்குளம் கிராம வீதியில் அழகுற அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் கெபி

தகவல்: ம. மரிய நிரோஜன் (றெஜின்தாஸ்)
பெரிய குஞ்சுக்குளம்

கோடி அற்புதராம் புனித அந்தோனியாருடைய அழியாத திருப்பண்டம் மன்னார் மறைமாவட்டத்திற்கு எடுத்து வரப்பட்டதன் நினைவாக கற்கிடந்தகுளப் பங்குத்தந்தை அருட்பணி. சீமான் மரியதாசன் அடிகளாரின் ஆலோசனைப் படி உதவி பங்குத்தந்தையாயிருந்த அருட்பணி யூட்ஸ் முரளிதரன் அடிகளாரின் விடா முயற்சியால் பெரிய முறிப்பு, பெரிய குஞ்சுக்குளத்து கிராம மக்களின் ஒத்தழைப்பினால் இக்கெபிக்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது. அன்று தொடக்கம் இறையாசீரால் வேலைகள் மிகவும் குறைந்த காலத்திற்குள் பூர்த்தியாகி புனித அந்தோனியாரின் திருச்சுருபத்தை கொண்ட கெபி பொழிவுற நிமிர்ந்து நிற்கின்றது. இக்கெபியானது பெரிய குஞ்சுக்குள கிராம வீதியின் அருவியாற்றின் அருகில் அமைந்துள்ளது. பெரிய குஞ்சுகுள கிராமத்தை நோக்கிய பயணத்தின் வரவேற்பிடமாகவும் சுற்றுலா பயணிகளுக்கு புனித அந்தோனியாரின் பரிந்துரை வேண்டி செபிக்கின்ற இடமாகவும் இக்கெபி அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 06.04.2010 செவ்வாய்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரால் இக்கெபி ஆசீர்வதிக்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் ஏராளமான குருக்களும் பக்தர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்த அழகிய புனித. அந்தோனியார் கெபியை உருவாக்க அருட்பணி. யூட்ஸ் முரளிதரன் முழு மூச்சுடன் முன்னின்று உழைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





## எமது நீங்காத நினைவில் இரண்டு வருடங்கள்




கடந்த ஏப்ரல் மாதம் 20ம் திகதியோடு அமரர் அருட்பணி. M. X. கருணாரட்ணம் அடிகளார் இறைபதம் அடைந்து இரண்டு வருடங்கள் நிறைவெய்தியது. தூரநோக்கு சிந்தனையையும், விடுதலை வேட்கையையும், மொழிப்பற்றையும் தன்னகத்தே சொந்தமாக்கிய மனித உரிமை ஆர்வலர் அருட்பணி. கருணாரட்ணம் அடிகளார் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் 20.10.2008 அன்று மல்லாவிக்கருகில் நயவஞ்சகரின் கிளைமோர் தாக்குதலுக்கு பலியாகிப் போனது நாம் அறிந்தது. முழு மனித விடுதலை ஆன்மீகத்தை முழுதாக சுவாசித்த கிளிபாதர் என அழைக்கப்பட்ட அருட்பணி M.X. கருணாரட்ணம் அடிகளாரின் நினைவு சரித்திரத்தில் நின்று நிலைக்கும். அன்னாரின் ஆன்மா ஆண்டவரில் இளைப்பாறுவதாக!

## சலேசியன் சபை முதல்வர் முருங்கன் விஜயம்

### முருங்கன் டொன் பொஸ்கோ நிலையத்தில் விமரிசை வரவேற்பு

உலகளாவிய சலேசியன் சபை முதல்வர் அருட்திரு பாஸ்குவால் சாவெஸ் அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தின் முருங்கன் பங்கில் அமைந்துள்ள டொன்பொஸ்கோ நிலையத்திற்கு கடந்த 13-04-2010 செவ்வாய்க்கிழமை வருகை தந்திருந்தார். அன்று பிற்பகல் 8.00 மணியளவில் இன்னிசை, கோலாட்டம், பரதநாட்டிய நிகழ்வுகள் வழி விமரிசையான வரவேற்பு அவருக்கு கொடுக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை, குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை மற்றும் முருங்கன் மறைக்கோட்ட பங்குத் தந்தையர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மறுநாள் 14-04-2010 அன்று டொன் பொஸ்கோ விடுதி மாணவர்களுக்கு சலேசியன் சபை முதல்வர் திருப்பலி நிறைவேற்றினார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. திருவாளர் A. D. தேவதாசன் அல்மேடா அவர்களின் தயாரிப்பில் உருவான, வன்னி மக்கள் அனுபவித்த வலிகளை சித்தரிக்கும் வகையிலான "எங்களின் ஏக்கங்கள்" எனும் நாடகம் தொன்பொஸ்கோ மாணவர்களால்



சிறப்பு நிகழ்ச்சியாக அரங்கேற்றப்பட்டது. சலேசியன் சபை முதல்வர் அருட்பணி. பாஸ்குவால் சாவெஸ் அவர்கள் தனதுரையில் "இளைஞர்களே! நீங்கள் தான் எதிர்காலம் என்று எல்லோரும் சொல்வார்கள் ஆனால் நீங்கள் எதிர்காலம் மட்டுமல்ல, நீங்களே நிகழ்காலம். எனவே

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

## தொழிலாளர் தினம்

வேர்வைத் துளிகளே, பேசுங்கள்!
மண்ணில் விழுந்த கதைகளைக் கூறுங்கள்
ஊரைக் காக்கவும், உலகை ஆக்கவும்
உழைத்த கைகளைப் பாருங்கள்

வயலில் உள்ள மணிகள்...
எங்கள் வியர்வை கனிகள்
வட்டமிடும் நிலத்துக்கும்
திட்டமிடும் தொழிலுக்கும்
சட்டமிட்டு உரிமைகள் பெறுவோம்
உலகம் முழுவதும் தொழிலுள்ள
உழைக்கும் மக்கள் இணைவோம்
(கவியரசு கண்ணதாசன்)

பாட்டாளிகளின் சிறப்புத் தினம் மே -1
பார்சன்ஸ், ஸ்பைஸ், ஏக்கல், ஃபிஷர்
என்ற நான்கு தொழிலாளிகள் 1886 மே
மாதத்தில் தூக்கிலிடப்பட்டதன் விளைவு:
வேலை நேரம் 17மணி நேரத்திலிருந்து
8மணி நேரமாக்கப்பட்டது!
பணி செய்ய 8 மணி நேரமும்
குடும்பம், சமுதாயம்... பார்க்க 8 மணி
நேரமும் எனவாயிற்று...!

வெறுங்கை என்பது மூடத்தனம்!
விரல்கள் பத்தும் மூலதனம்
இறைவனே – முதல் தொழிலாளி
நாம் அவரின் உடன் உழைப்பாளி



# மன்னா
## மனப்பொழிவு
### ஆசிரியர் குழு பகர்வு

## காலம் எங்களுக்கு பதில் சொல்லும் என்னும் நம்பிக்கையில் காத்திருப்போம்–உரிமைக்காய்

"ஆண்டவ(ன்)... படைச்சா(ன்)... எங்கிட்ட கொடுத்தா(ன்).. அனுபவிடா ராஜா.. அனுபவி" என்ற கவிஞனின் கூற்றுக் கேற்ப இந்த அகில உலகத்தையும் படைத்த கடவுள் அதை அனுபவிக்க மாத்திரமல்ல, ஆள்வதற்கு மாத்திரமல்ல, அதை அபிவிருத்தி செய்யவும் வேண்டுமென்று விரும்பினார். இப்படியாக இந்த உலகத்தையும் படைப்பனைத்தையும் ஏன் தனது தனிப்பட்ட குடும்ப வாழ்வையும் விருத்தி செய்ய வீரியத்தோடு வாழ்வை வாழ்ந்துமுடிக்க 'உழைப்பு' என்ற உரிமையையும் கடமையையும் மனிதனுக்குள்ளே ஊட்டிவைத்தார்.நான்காம் ஆண்டு படிக்கின்ற மாணவர்களுக்கு ஆசிரியர் சித்திரப்போட்டி ஒன்றை ஒழுங்குபடுத்தியிருந்தார். தலைப்பு; கடவுளின் படைப்பு. எல்லா மாணவர்களும் அழகாக சித்திரம் வரைந்திருந்தனர். அழகிய உயர்ந்த மலைகள், பாய்ந்து ஓடும் நதிகள், வண்ண நிற மலர்கள், துள்ளிப்பாயும் மான்கள், நீண்டு விரிந்த கடற்கரைகள் இப்படியாக பல அழகிய காட்சிகள். ஒரு மாணவன் மட்டும் மண்வெட்டியும் கையுமாக தோட்டத்திலே பயிர் நடுகின்ற விவசாயியை வரைந்திருந்தான். கீழே கடவுள் படைக்கின்றார் என்று எழுதியிருந்தான்.

கடவுள் படைப்பாளி மாத்திரமல்ல அவர் ஒரு தொழிலாளியும் கூட. படைப்பு என்பது தொழிலைக் குறிக்கின்றது. தொழில் என்பது ஒரு மனிதனுக்கு, அவனது படைப்பின்போது, அவனது உருவாக்கத்தின் போது அவனுக்குள்ளே விதைக்கப்படுகின்ற உரிமையும் கொடையுமாகும். எனவேதான் தூய பவுல் 'உழைக்காதவன் உண்ணலாகாது என்று கூறுகின்றார்.

மே மாதம் என்றால் எங்கள் சிந்தனைக்கு வருவது, தொழிலாளர் தினம்....... சிலோகங்கள்..... பதாதைகள்.... மே தின ஊர்வலங்கள்...... தொழிலாளர்களின் உரிமைக்கான போராட்டங்கள். ஒரு மனிதன் உழைக்க வழி இல்லையென்றால் அவனாலே உண்ண முடியாது, உண்ண வழி இல்லையென்றால் அவனாலே வாழ முடியாது. ஆக உழைப்பு என்பது அடிப்படையிலே ஒரு மனிதனின் 'இருத்தல்' அல்லது 'வாழ்வு' என்கின்ற நிலையை தக்கவைத்துக்கொள்வதற்கான முயற்சி என்று கூறலாம்.

பேச்சு உரிமை, வாக்குரிமை, சமய உரிமைகள், இருப்பு உரிமைகள் என்று ஏராளமான உரிமைகளையே மூலதனமாகக் கொண்ட ஜனநாயக நாடுகளுக்கு மத்தியிலே மனித உரிமை மீறல்கள் நிறைந்த நாடுகளின் பட்டியலில் முன்னுக்கு நிற்கின்ற எமது நாட்டிலே (இன்னும் குறிப்பாக நடந்து முடிந்த கொடிய யுத்தத்திலே கொத்தணிக் குண்டு மழையாலே கொல்லப்பட்ட, உயிரோடு புதைக்கப்பட்ட, நிராயுத பாணிகளாக சரணடைந்தவர்களை சல்லடையாக சுட்டுக்கொன்ற,.... இன்னும் முற்கம்பி முகாமிற்குள்ளே முடக்கப்பட்ட, ஏன் கல்லறைகளையே தோண்டி அங்கே அமைதியாக துயிலுகின்ற ஆன்மாக்களையே கொச்சைப்படுத்துகின்ற... எமது நாட்டில்.) மே தினம் என்ன? தொழிலாளர் தினம் என்ன? எமது உரிமைகளைப்பெற்றுத்தரவா போகின்றது?.
திட்டமிட்ட நில அபகரிப்புக்களும், குடியேற்றங்களும், தமிழர் வாழ்விடங்களையும் அவர்களின் தொழில் வளங்களையும் சூரையாடுகின்ற நீண்டகால சதித்திட்டங்களும் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. இதை தடுத்து நிறுத்தப்போவதற்கு இன்று யாருக்கும் வலிமையில்லை, நெஞ்சிலே துணிவில்லை, சிந்தனையிலே தெளிவில்லை. உயிருக்குப்பயம் மாத்திரமல்ல, நக்கினார் நாவிழந்தார் என்பதைப்போல பணத்திற்கும் பட்டத்திற்கும் சோடை போனதினாலே பேச்சுமிழந்து மூச்சுமிழந்து நிற்கின்ற நிலைதான் இன்று.

விவிலியத்திலே காணப்படுகின்ற போர்களும், புரட்சிகளும் அடிப்படையிலே தமது உரிமைக்கான போராட்டங்களே. இருந்தாலும் எல்லாப்போர்களுமே வெற்றி பெற்றதாக இல்லை. எல்லா புரட்சிகளுமே உரிமையை வென்றெடுத்ததாக இல்லை. உயிரோடு புதைக்கப்பட்ட நல் உணர்வுகளும் சரி, நியாயமான உரிமைகளும் சரி ஓர் நாள் உயிர்த்தெழும் என்பது உண்மை, காலங்கள் அவருடையன, யுகங்களும் அவருடையன. ஆகவே காலம் இதற்கு பதில் சொல்லும் என்னும் நம்பிக்கையில் காத்திருப்போம் உரிமைகளுக்காய்.



# வாசகர் எண்ணங்கள்



## மன்னா

என் வாழ்வில் வந்த முதல் தொடர்
என்னை ஒரு நொடிப்
பொழுதில் மாற்றிவிட்டது

பாசம் என்பதை உணர்ந்து
பிறர் வாழ வழி வகுத்தது
என் அன்பு – மன்னா

பிறரின் துன்பம் துடைத்து
என்னை உதவச் செய்த
என் காகிதமே நீயடி

ஒரு மாதத்தில் ஒரு முறை
வந்தாலும் என் உணர்வுகள்
கண்ணீராய் பெருக்கெடுக்கும்

நீ வரும் போதெல்லாம்
நற்செய்தியுடன் கூடிய
சந்தோச மழையில் நான்
நனைய உன்னை எதிர் பார்க்கும்
உயிர் தோழியாக நினைத்துக் கொள்

மா. வியான்சி சிராய்வா
1ம் வட்டாரம், கடற்கரைவீதி,
பேசாலை.



## கடல் அலைபோல் பரந்து விரிந்து

கத்தோலிக்க மக்களாகிய எம் ஒவ்வொருவரின் உள்ளங்களிலே இல்லங்களிலே தவழ்ந்து விரிந்து மணம் பரப்புகின்ற மன்னாவே! உன்னை நான் வாழ்த்தி போற்றுகின்றேன். உனது வரவிற்காக மாதம் ஒரு முறை காத்து நிற்கின்றேன். நீ எமது கரங்களில் கிடைத்தவுடன் என்ன வேலை கிடந்தாலும் உன்னை வாசித்து சுவாசிக்காமல் விடமாட்டேன். நீ அள்ளித்தரும் அனைத்து ஆக்கங்களும் அருமையிலும் அருமை. குறிப்பாக பதிப்பாசிரியர் பகர்வு, பங்குத்தள செய்திகள், சிறுவர் பொழிவு, விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி ஆகியவை எம்மைக் கவர்ந்தவை அத்தோடு இனியும் நல்ல ஆக்கங்களை எமக்கு தருவாயென எதிர்பார்த்து காத்திருக்கிறோம். மாதம் ஒரு முறை மலரும் மன்னாவே! மீண்டும் உன்னை வாழையடிவாழையாக வளம்பெற வேண்டுமென வாழ்த்தி மகிழ்கின்றேன்.

ச. சாளினி மொறாய்ஸ்,
அரிப்புத்துறை.

# கருத்துக் களம்

கருத்துக்களப் பகுதியில் இடம்பெறும் கருத்துக்கள் மன்னாவின் கருத்துக்கள் அல்ல. கருத்துகளுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே! நீங்களும் உங்கள் கருத்துகளை ஆதரித்தோ மறுத்தோ எழுதலாம். (பதிப்பாசிரியர்).

## "கல்வாரியில் கருணை மழை"
### இரட்சணிய வரலாற்றில் இயேசுவின் திருப்பாடுகளின் வரலாற்று ஆற்றுகை - ஒரு பார்வை

திரு.யோசேப் ஆரோக்கியம் குரூஸ்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்விப் பணிமனை - மடு

இலக்கிய வடிவம் ஒன்றினை மதிப்பீடு செய்ய புகும்வேளை "பாட்டெழுதி பெயர் வாங்கும் புலவர்களுமுண்டு. குற்றம் கண்டே பெயர் வாங்கும் புலவர்களுமுண்டு" எனும் திருவிளையாடல் சினிமாப்பட வசனம் ஞாபகம் வந்து நிற்கும். திறனாய்வென்பது வெறுமனே இலக்கியப் படைப்புக்களினை மதிப்பிடுவது மாத்திரமன்று இலக்கியத்தை சுவைஞர் முன் தகுந்த முறையில் அறிமுகம் செய்து வைப்பதும் அதற்கு சமுதாயத்தில் ஓர் அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுப்பதும், படைப்பாளி சுவைஞர் ஆகியோரது அறிவுநிலை, சுவைத்திறன் முதலானவற்றை உயர்த்துவதும், ஒரு படைப்புபற்றிய பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதும், இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவதும் மானுடத்தின் மாண்பினைப் பேணுவதும் கூட திறனாய்வின் பங்களிப்பாகும். படைப்பாளி சுவைஞன் ஆகிய இரு திறத்தாருக்குமிடையிலே பாலமாக இருந்து பலமான பங்களிப்பினைச் செய்பவன் திறனாய்வாளன் என்னும் கலாநிதி துரைமனோகரன் அவர்களது திறனாய்வு பற்றிய எண்ணப்பாங்கினை மனங்கொண்டு "கல்வாரியில் கருணை மழை" எனும் தலைப்பிடப்பட்டு மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மைதானத்தில் 28.03.2010 – 29.03.2010 ஆகிய இரு தினங்கள் மேடையேற்றப்பட்ட இரட்சணிய வரலாற்றில் இயேசுவின் திருப்பாடுகளின் வரலாற்று ஆற்றுகை எனும் கிறிஸ்தவர்கள் நெஞ்சங்களில் ஆழப்பதிந்திருக்கும் திருமறை உண்மைகளை வெளிப்படுத்திக் காட்ட தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான படைப்புப் பற்றிய எனது எண்ணப் பதிவுகளை பகிர்ந்து கொள்ள அவாவி நிற்கின்றேன்.

கதை, வசனம், பாடல், இசை, பின்னணிப்பாடல், நெறியாள்கை போன்ற நாடகத்தின் பிரதான அம்சங்கள் பலவற்றை தன்னுடையவைகளாக கொண்ட கலைஞர் என்.எம்.பாலச்சந்திரன் அவர்களால் முன்வைக்கப்பட்ட இப்படைப்பானது விளம்பரங்களில் குறிப்பிடப்பட்டது போன்று பிரமாண்டமான படைப்பாகும். ஏறக்குறைய முன்நூறு (300) பங்கேற்றுனர்களதும், சில ஆடுகள், புறாக்கள் போன்ற விலங்குகள், பறவைகளதும் ஒத்தாசையுடன் சனரஞ்சமாக படைக்கப்படவேண்டும் என்ற பாரிய உள்ளார்ந்த உந்துதலுடனும், ஏறக்குறைய 200அடி நீளமும், 25அடி அகலமும் கொண்ட பாரிய மேடை அமைப்பு, மேடை அலங்காரங்கள், போன்றவற்றுடனும் பெருமளவு பணம், மனித உழைப்பு, காலம் போன்ற உள்ளீடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட பாரிய முயற்சி. இது பாராட்டப்பட வேண்டிய முயற்சி. பல்லாயிரக் கணக்கானோரின் சிந்தனையை கொள்ளை கொண்ட முயற்சி. ஏறக்குறைய எண்பது சம்மனசுகள் மேடைமுழுவதையும் அலங்கரித்து பார்வையாளர் கவனத்தை ஆகர்ஷித்து நின்றமை, இயேசு அலகையினால் சோதிக்கப்படுகின்ற வேளை உயர்ந்த மலைமேல் கொண்டு போகப்பட்டது போல மாடிவீட்டின் உச்சியில் அக்காட்சி தத்ரூபமாக காட்டப்பட்டமை, ஆடுகள்,புறாக்கள் மேடையில் இயல்பாக உலாவ விடப்பட்டமை போன்றன நல்ல உத்திகள். முதல் மனிதனின் படைப்புடன் ஆரம்பித்து இடையில் இயேசுவின் புதுமைகள் பலவற்றை உள்ளடக்கி உத்தானத்துடன் நிறைவுபெற்ற இந்நிகழ்வு இளந்தலைமுறையினருக்கு திருமறையின் அறிகைகளினை மனங்கொள்ள, மனப்பதிவுகளை ஏற்படுத்த உதவும்.

ஆயினும் மக்களின் மனங்களில் பதிவு பெற்ற மறை உண்மைகளினை வெளிப்படுத்திக் காட்டும் வேளை நெறியாள்கை செய்பவர்கள் சில அடிப்படை அம்சங்களிலிருந்து விலகிவிடக்கூடாது. முக்கியமாக கிறிஸ்து இறப்பு நிகழ்வின் அல்லது திருப்பாடுகளின் மையப்பொருள் இயேசு சிலுவையில் உயிர்துறப்பது என்பது யாவரும் அறிந்தது. சிலுவையில் உயிர்நீக்கும் இயேசு, சிலுவையில் அறையப்பட்டு, சிலுவையுடன் உயர்த்தப்பட்ட பின்னர் சிலுவையில் நின்று அவரது உடலை இறக்கி எடுக்கும்வரை இயேசுவாக நடிப்பவர் மீது தன்னுடைய முழுக்கவனத்தையும் நெறியாள்கை செய்பவர் குவித்துவைத்து அதன்பின்னர் நடைபெறும் நாடகத்தின் ஏனைய அம்சங்களினை குறுக்கிச் செல்வது அத்தியாவசியம். தற்போது சிலுவையில் இறந்த இயேசுவாக காட்சியளிப்பவர் உயிருள்ள ஒரு சாதாரண மனித ஜீவன். அந்த ஜீவன் எந்தளவு துன்பத்தைத் தாங்கி துடித்து நிற்கிறது என்பதை மறந்துவிட்டு அதன் பின்னர் வரும் காட்சிகளிலேயே தனது கவனக்குவிப்பை நெறியாளர் செலுத்தும் போது இறந்ததாக கருதப்பட்டவர் சிலுவையில் அசைந்து கொண்டிருந்தால் அது முழு மறை உண்மைகளினதும் அடித்தளத்தையே இளம் உள்ளங்களில் ஆட்டங்காணச் செய்துவிடுவதுடன் இரசனையின் மறுபக்கத்திற்கு சுவைஞர்களினை இட்டுச் சென்றுவிடும். இத்தகைய ஒரு மனத்துன்பமான நிலைமையை காணக்கூடிய துர்ப்பாக்கியம் சுவைஞர்களுக்கு ஏற்பட்டது. மட்டுமன்றி இயேசு கற்றூணில் கட்டுண்டு அடிபடும் காட்சியும், முள்முடி சூட்டப்படும் காட்சியும் விசுவாசத்தின் ஆணிவேர்கள்.

The passion of Christ எனும் திருப்பாடுகளினைக் காட்சிப்படுத்தும் ஆங்கிலத் திரைப்படத்தில் இயேசு கற்றூணில் கட்டுண்டு அடிக்கப்படுகின்ற காட்சியும், அதற்கென பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும், அவர் அடிபட்ட இடத்தில் வழிந்தோடும் அவரது குருதியினை தேவதாயார் துணி ஒன்றினால் ஒத்தியெடுக்கும் காட்சியும் காண்போருள்ளத்தைக் கரைத்து நிற்பதுடன் மட்டுமன்றி விருதுகள் பலவும் வென்ற காட்சியமைப்பாகும். (தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்கவும்)

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

# கறிற்றாஸ் வாழ்வுதயம்

## மன்னார் மறைமாவட்ட புதிய குருக்களின் பணித்தளங்கள்

கடந்த 16.04.2010 அன்று பணிக்குருத்துவத்திற்கு திருநிலைப்படுத்தப்பட்ட மன்னார் மறைமாவட்ட புதிய குருக்கள் இருவரும் பணித்தளத்தில் காலடி பதித்துள்ளனர். அருட்பணி. அன்ரன் தவராஜா, மன்னார் பேராலயப்பங்கின் உதவி பங்குத்தந்தையாகவும் அருட்பணி. எமில் எழில்ராஜ் பேசாலை பங்கின் உதவி பங்குத்தந்தையாகவும் பணியாற்ற நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

## இளைஞர் தவக்கால தியானம்

### தகவல்: எட்வேட் ஜோய் ஜெயந்தன் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு

மன்னார் மறைமாவட்ட இளைஞர்களுக்கான தவக்காலத்தியானம் பங்குனி மாதம் 26ம் திகதி முதல் 28ம் திகதிவரை மடுத்திருப்பதியில் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது. இத்தியானத்தில் 1317 இளைஞர்கள் பெருமனதுடன் வருகைதந்து பங்கெடுத்தது பாராட்டுக்குரியது. இத்தியான நிகழ்வுகள் யாவும் தென் இந்தியாவிலிருந்து வருகை தந்த புதுவாழ்வு செபக்குழுவினரினால் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இத்தியானத்தின் ஆரம்ப நிகழ்வில் மூன்று நாள் தியான நிகழ்வுகள் பற்றிய விளக்கத்தினை மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்தந்தை பி. ஜேசுராஜா வழங்கினார். தியானக் குழுவினரால் இளைஞர்களை ஒருமுகப்படுத்துவதற்கான பாடல்கள், செபங்கள், சிந்தனைகள் வழங்கப்பட்டன. அன்றைய திருப்பலி அருட்திரு யு. றொக்சன் குருஸ் அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டு மறையுரை ஆற்றப்பட்டது. இரண்டாம் நாளிலே மனமாற்றச் சிந்தனைகள் தியானக் குழுவினரால் வழங்கப்பட்டபோது அனேக இளைஞர், யுவதிகள் மனமாற்றத்தின் அறிகுறியாய் கண்ணீர் விட்டு அழுததை காணமுடிந்தது. அன்று பிற்பகல் இருபது குருக்களினால் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. அன்றைய மாலைத் திருப்பலி ஆயர் தலைமையிலான கூட்டுத்திருப்பலியாய் அமைந்திருந்தது. இளைஞர்களின் அழைப்பு பற்றியும் அவர்களினால் திருச்சபைக்கு ஆற்றப்படக்கூடிய பணிகள் பற்றியும் ஆயர் தனது மறையுரையில் எடுத்தியம்பினார்.

தியானத்தின் இறுதி நாள் குருத்தோலை ஞாயிறு ஆகும். குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசை அடிகளாரின் தலைமையில் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது. குரு முதல்வர் தனது மறையுரையில் இளைஞர் ஒவ்வொருவரும் தினமும் கிறிஸ்துவை தாங்கிச் செல்லும் கருவியாகச் செயற்படுமாறு கேட்டுக்கொண்டார். திருப்பலி முடிவில் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனரின் நன்றியுரையைத் தொடர்ந்து மடுத்தாயாரின் கீதத்துடன் தியானம் நிறைவெய்தியது. இத்தியானம் இனிதே நிகழ்ந்து முடிய உதவிய அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

## மன்னார் தமிழ்ச் சங்கத்தின் கலை இலக்கிய விழா

சித்திரைப் புத்தாண்டையொட்டி மன்னார் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்த கலை இலக்கிய விழா கடந்த 17.04.2010 அன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி லோகநாதன் அவர்கள் வரவேற்புரை நிகழத்தினார். மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமை உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக முசலி பிரதேச செயலாளர் திரு. எஸ். கேதீஸ்வரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக மடு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியன் அவர்களும் கலந்துகொண்டனர்.

மன்னார் கல்வி வலயத் தமிழ்ப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களும், கள்ளியடி பாடசாலை அதிபர் திரு.ஆ.மா.பஞ்சலிங்கம் அவர்களும் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

முன்னாள் தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கலா சிவகுமாரவேலு அவர்களின் தலைமையில் கவியரங்கம் இடம்பெற்றது. இதில மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு கவிஞர்கள் கலந்துகொண்டு தற்கால தமிழர் வாழ்வுச் சூழலை மையமாக வைத்து "புத்தாண்டின் புலர்வினிலே..." என்ற தலைப்பில் உணர்வுப்பூர்வமாகக் கவிதை மழை பொழிந்தனர். திரு.வே.பொ. மாணிக்கவாசகர் தலைமையில் "மெல்லத் தமிழினிச் சாகும் என்ற பாரதியின் வார்த்தை மெய்யாகுமா? பொய்யமாகுமா?" என்ற தலைப்பில் சுவையான பட்டிமன்றம் நடைபெற்றது. ஆசிரியர் என். அமலானந்தர் குமார் அவர்களின் நெறியாள்கையில் உருவான 'சிலம்பு தீ ஆகிறது" என்ற இலக்கிய நாடகமும் இடம்பெற்றது. நன்றியுரையினை மன்னார் தமிழ் சங்கத்தின் செயலாளர் திரு. வி. எஸ். சிவகரன் அவர்கள் வழங்கினார். தமிழின்பம் நுகர்ந்த மகிழ்வில் அனைவரும் விடைபெற்றுச் செல்ல இக்கலை இலக்கிய விழா இனிதே நிறைவுற்றது.

## தேவன்பிட்டி பங்கில் மேய்ப்புப்பணித்திட்ட அமர்வு

தேவன்பிட்டி பங்கு மக்கள் தம் சொந்த ஊரில் மீள்குடியேறி பங்குச் செயற்பாடுகள் உத்வேகம் பெறும் நிலையில் கடந்த 21.04.2010 அன்று இவ்வாண்டின் உலகளாவிய மற்றும் தலத்திருச்சபையின் கருப்பொருளாகிய குருக்களின் வாழ்வும் பணியும் என்பதனை மையப்படுத்தி தமது பங்கிற்கான மேய்ப்புப்பணித்திட்டத்தை வகுக்க அமர்வொன்றினை நடாத்தினர். தேவன்பிட்டி பங்குத்தந்தை அருட்பணி. க.சுகுணராஜ் குருஸ் அவர்களின் ஏற்பாட்டில் பங்குச்சபை உறுப்பினர்கள், மறையாசிரியர்கள், அன்பியபணியாளர்கள், இளைஞர் ஒன்றிய நிர்வாகஉறுப்பினர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலில் இவ்வமர்வு இடம்பெற்று பங்குமேய்ப்புப்பணித்திட்ட தீர்மானங்கள் நிரல்படுத்தப்பட்டன. இம் மேய்ப்புப்பணித்திட்ட அமர்வினை அன்பிய இயக்குனரும், அன்பிய தொடர்பக பணியாளர்களும் நெறிப்படுத்தியிருந்தனர்.

அதே நாளில் தேவன்பிட்டி கிராமத்தில் அன்பிய புதுப்பித்தல் நிகழ்வு இடம்பெற்றது. முன்னமே அன்பிய ஆணைக்குழுவினால் சந்திக்கப்பட்டிருந்த குடும்பங்கள் அன்பியங்களாக பிரிக்கப்பட்டன. அதன்படி தேவன்பிட்டி கிராமத்தில் 13 அன்பியங்கள் புதுப்பிக்கப்பட்டு அவற்றிற்கு பெயரிடப் பட்டதோடு 28 அன்பிய பணியாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது. மீளவும் அன்பிய செயற் பாடுகளை ஆர்வத்தோடு முன்னெடுப்பதற்கு பங்குத் தந்தையும் பங்குமக்களும் உறுதி பூண்டுள்ளதை காணக்கூடியதாயுள்ளது.

## மீள்குடியேறிய எம்பகுதியில் செவ்வனே ஆற்றப்படும் வாழ்வுதயத்தின் முன்பள்ளி செயற்பாடுகள்

### பறப்பாங்கண்டல் புனித சிந்தாத்துரை மாதா முன்பள்ளி ஆசிரியர் அறிக்கை

வாழ்வுதயம் முன்பள்ளி செயற்பாடுகளை மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. இந்நிறுவனம் இன, மத, குல பேதமின்றி எமது கிராமத்தை அணுகி தனது மனிதநேய பணிகளோடு இம் முன்பள்ளி செயற்பாடுகளை செவ்வனே ஆற்றிவருகின்றது. மேலும் கடந்த யுத்த சூழலில் இடம்பெயர்ந்து மீண்டும் நாம் எமது சொந்த இடம் வந்துள்ள நிலையில் தனது பணியை நிறுத்தாமல் தொடர்ந்து ஆற்றி வருகின்றமை எமக்கு உற்சாகத்தை தருவதோடு முன்பள்ளி பிள்ளைகளையும் மிகக்கவனமுடன் வழிநடத்த உறுதுணையாய் உள்ளதென்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்துக்கணிப்பு படிவத்தில் குறிப்பிட்டுள்ளார் பறப்பாங்கண்டல் புனித சித்தாத்துரை மாதா முன்பள்ளி ஆசிரியர். வாழ்வுதயத்தினால் தற்போது 111 முன்பள்ளிகள் மன்னார், வவுனியா மாவட்டங்களில் இயக்கப்ப - டுகின்றது. இவற்றில் 2913 முன்பள்ளி மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இம் முன்பள்ளி மாணவர்களுக்கான தினசரி சத்துணவும் பாடசாலை சீருடை பாடசாலை உபகரணங்கள், ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு, அன்பளிப்பு போன்றன வழங்கப்படுகின்றன. இவற்றை விட கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் கல்வி பிரிவினால் வறிய, தாய்தந்தை இழந்த மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் கொடுக்கப் படுகின்றன. விடுதிச்சாலைகளில் தங்கியிருந்து கல்வி கற்க வசதியற்ற மாணவர்களுக்கு இலவசமான பாடசாலை உபகரணங்கள், சீருடை துணிகள், சப்பாத்து, புத்தகப்பை, போன்றன வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 81 பல்கலைக்கழக மாணவரும் 286 கல்வி உதவி பெறும் மாணவரும் 128 முன்பள்ளி ஆசிரியர்களும் 17 பாடசாலை தொண்டர் ஆசிரியர்களும் பயன்பெறுகின்றனர்.

## ஆற்றுப்படுத்தும் பணியில் வாழ்வுதயம்

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக வன்முறைக் கலாசாரம் எம் நாட்டில் தாண்டவமாடி மக்களை சொல்லொண்ணா துன்பத்தில் மூழ்கவைத்தது. எமது பிரதேசங்களில் மக்கள் உயிரையிழந்து, உறவையிழந்து, உடைமைகளையிழந்து அனாதரவாக்கப்பட்டனர். இந்நிலையில் ஆற்றுப்படுத்தல் பணியானது அவசரப் பணிகளில் ஒன்றாகவிருந்தது.

இக்காலத்தில் வாழ்வுதயம் தனது ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை இதற்கென பயிற்றப்பட்ட பணியாளர்களூடாக ஆற்றுப்படுத்தல் இணையங்களோடிணைந்து முன்னெடுத்தது. வைத்தியசாலைகளில் காயங்களுக்குள்ளாகி அனுமதிக்கப் பட்டிருந்த நோயாளர்களுக்கு முதலில் மனித நேய சரீர உதவிகளுடன் ஆற்றுப்படுத்தல் பணி ஆற்றப்பட்டது.

பெற்றோரை இழந்த பிள்ளைகளை பராமரிக்கும் வவுனியா டொன்பொஸ்கோ சிறுமியர் இல்லம், மன்னார் டிலாசால் சிறுவர் இல்லம் சென்று சிறுவர்களை ஆற்றுப்படுத்தி விளையாட்டுக்கள், குறும்படங்கள் ஊடாக படிப்பினைகள் வழங்கப்பட்டன. ஆனந்த குமாரசாமி இடைத்தங்கல் முகாமிலும் இப்பணியாற்றப்பட்டது. தற்போது கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் உதவிக்கரப்பிரிவின் பயனாளிகளாகவிருக்கும் நபர்களுக்கு இவ்வாற்றுப்படுத்தல் பணி நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

## மாணவ சமுதாயத்திற்கு ஒளியூட்டும் வாழ்வுதய கணனிப் பயிற்சி பிரிவு

வாழ்வுதய கணனிப் பயிற்சிப் பிரிவானது கடந்த 13 வருடங்களாக மாணவ சமூகத்தின் நன்மை கருதி சிறப்பாக இயங்கிவருகின்றது. இன்றுவரை ஆயிரக்கணக்கான மாணவர்கள் இப்பயிற்சிப் பிரிவினால் பயிற்றப்பட்டு பெரும் நன்மை அடைந்திருக்கிறார்கள்.

இப்பயிற்சி நெறியில் கற்றவர்கள் இன்று பல்வேறு திணைக்களங்களிலும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களிலும் எமது கறிற்றாஸ் வாழ்வுதயத்திலும் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

கணனியின் நவீன பயிற்றுவிப்புகளுக்கு அமைவாக இப்பயிற்சி நெறியானது பயிலுனர்களுக்கு கொடுக்கப் படுகிறது. கல்வி பொதுத்தர சாதாரண தர (G. C.E. O/L) பரீட்சையை நிறைவு செய்த மாணவர்களுக்கு - ஜனவரி - ஏப்ரல் காலப்பகுதியிலும் கல்வி பொதுத்தராதர உயர்தர (G C E A/L) பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு செப்ரம்பர் - டிசம்பர் காலப்பகுதியிலும் வெளிநிறுவன அலுவலர்களுக்கு மே – ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியிலும் இப்பயிற்சி நெறியானது வழங்கப்படுகின்றது. G. C.E. O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் 40 பேருக்கு தகவல் தொடர்பு தொழினுட்ப டிப்ளோமாப் பயிற்சியும் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளது. வாழ்வுதயத்தின் இப்பயிற்சிப் பிரிவு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் பதிவுசெய்யப்பட்டதொன்று என்பதால் இங்கே வழங்கப்படும் சான்றிதழ்கள் பெறுமதியா-னவை என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தனையாய் எண்ணில் சிதறியவை சில

- புரியாத பிரியம் பிரியும் போது புரியும்
- நட்பு எனும் ஊன்றுகோலை வாழ்வில் எடு தனிமையைப் பற்றி சிந்திக்காதே
- அனைவரையும் நேசிக்கலாம் ஆனால், ஒரு சிலரைத்தான் நண்பர்களாய் நேசிக்கலாம்.
- நாம் அதிகமாய் அன்பு செய்வது எமக்கு சில சூழ்நிலைகளில் கிடைக்காமல் போகலாம் ஆனால் அப்போது கூட அதனை அதிகமாக அன்பு செய்ய வேண்டும்.
- துன்பத்தை அனுபவித்த காயத்தை மறந்து விடு, ஆனால் அது உனக்கு விட்டுச் சென்ற பாடத்தை மறந்து விடாதே
- பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது, பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது.
- மனிதன் வாழ்வில் நம்பிக்கையை இழப்பது மரம் வேரை இழப்பதற்கு சமம்.
- நீ மனிதனின் கெட்டகுணங்களை வெறுத்துவிடு, ஆனால் மனிதனை வெறுக்காதே

இரா. மரிய துஷாந்தினி, தலைமன்னார் பியர், தலைமன்னார்.

# குருத்துவ பொழிவு

குருக்களின் ஆண்டையொட்டிய சிறப்புக் கட்டுரை


# திருநிலைக் குருத்துவம்

பணி.விக்டர் தேவராஜ்

உலக வரலாற்றில் பல மறைகள் தோன்றியுள்ளதைக் காண்கிறோம். ஒவ்வொரு மறைக்கும் ஒரு அடித்தளத் தனித்தன்மை அனுபவம் இருக்கிறது. அதே வேளையில் அனைத்து மறைகளுக்கும் பொதுவான ஒருசில கூறுகளைக் காண்கிறோம். அனைத்து மறைகளும் மக்களை கடவுள்பால் அழைத்துச் செல்கின்றன. இப்பணியில் குருக்கள் பெரும்பங்கு ஏற்கின்றனர். கடவுளுக்குப் பலி செலுத்துவதும், கடவுளின் வார்த்தைகளைப் பறைசாற்றுவதும் மனிதர்களை வழிநடத்துவதும் குருக்களின் முப்பெரும் பணிகளாகப் பரிணமிக்கின்றன. இறைவன் புனிதமானவர். அவரை அடைய வேண்டிய மக்களும் புனிதமடைய வேண்டும். எனவே குருக்கள் பலி செலுத்தி மக்களின் வேண்டுதல்களை கடவுள்பால் எழுப்பவும் கடவுளின் அருளை மக்கள் மீது பொழியவும் செய்தார்கள்; இறைவாக்குப் பணி வழியாக இறைவனின் வார்த்தையை மக்களுக்குப் பறைசாற்றினர்; தனி மனிதனாக அல்ல, மாறாக ஒரு குடும்பமாக, குழுமமாக இறைவனிடம் சேர வழிகாட்டினர் குருக்கள்.

வரலாற்றின் மையம், நாயகன் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து. உறவு இழந்த மக்களை தன் தந்தையின் உறவில் மீட்க வந்தவர் நம் இயேசு கிறிஸ்து. இப்பணியை இவர் நிறைவாக, நிலையாக, ஒப்புயர்வில்லா தன்மையில் செய்தார். எனவே அவர் ஒப்புயர்வற்ற, உன்னத குருவாக என்றும் திகழ்கின்றார். இவரது குருத்துவம் நிலையானது, நிறைவானது, ஒப்புயர் - வில்லாதது. குருத்துவத்தின் முப்பெரும் பணியும் இவரில் முழுமை அடைகிறது. அவருக்கு முன்பிருந்த குருத்துவம், அது எம்மறையைச் சார்ந்ததாயினும், முழுமையடையாத குருத்துவம்; கிறிஸ்துவின் குருத்துவத்தை சுட்டிக்காட்டுவதாகவும் கிறிஸ்துவின் குருத்துவத்தில் தெளிவைக் காண்பதாகவும் அமைந்தது. அ∴து ஓர் அடையாளக் குருத்துவம். விடுதலைப் பயணத்தின் நாயகன் மோசே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. மோசே இரத்தத்தில் ஒரு பாதியை எடுத்துக் கலங்களில் விட்டு வைத்தார். மறுபாதியைப் பலி பீடத்தின்மேல் தெளித்தார். அவர் உடன்படிக்கையின் ஏட்டை எடுத்து மக்கள் கேட்கும்படி வாசித்தார். அவர்கள் ஆண்டவர் கூறிய அனைத்தையும் நாங்கள் செயல்படுத்திக் கீழ்ப்படிந்திருப்போம் என்றனர். அப்போது மோசே இரத்தத்தை எடுத்து மக்கள் மேல் தெளித்து, "இவ்வனைத்து வார்த்தைக்குமிணங்க, ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் இரத்தம் இதோ" என்றார். மோசே குருத்துவத்தின் முப்பெரும் பணியையும் செய்துள்ளது மேற்கண்ட இறைவார்த்தைகளில் மிகத் தெளிவாகக் காணக்கிடக்கின்றது. மக்களை இறைவனுடன் இணைக்க மோசே இப்பணிகளை மேற்கொண்டார். மக்கள் கடவுளின் மக்களாகவும், கடவுள் மக்களின் கடவுளாகவும் உடன்படிக்கை ஒன்று உருவாகியது. பழைய உடன்படிக்கை அது. அது குறையுள்ளது. உடன்படிக்கைக்கு உறுதிட்ட, ஆடு மாடுகளின் இரத்தம் தெளிக்கப்படுகிறது. இங்கு குரு வேறாகவும், பலிப்பொருள் வேறாகவும் இருக்கின்றனர். குறைவுள்ள பழைய உடன்படிக்கையை நிறைவுள்ளதாக்குகிறது புதிய உடன்படிக்கை. இங்கு குருவும் பலிப்பொருளும் ஒன்றே. இயேசு கிறிஸ்துவே குரு, அவரே பலிப்பொருளும்; அனைவரும் இதை வாங்கி உண்ணுங்கள். ஏனெனில் இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல். அனைவரும் இதைவாங்கிப் பருகுங்கள், ஏனெனில் இது உங்களுக்காக சிந்தப்படும் என் இரத்தம். இதை என் நினைவாகச் செய்யுங்கள்". இறுதி இரா உணவு கல்வாரிப் பலியின் முன்னோட்டம். இன்று நாம் நிறைவேற்றும் பலி கல்வாரிப் பலியை இன்றைய காலத்துள் கொணர்தல். கல்வாரிப் பலி இயேசுவினுடைய வாழ்வின் ஒட்டு மொத்தம், கொடுமுடி. 'அன்னை மரியாளின் உதரத்தில் அவர் கருவாகி உருவான நேரத்திலிருந்தே அவருடைய சிலுவை அவரோடு இணைந்திருந்தது' என்று பேராயர் ∴புல்டன் ஜே ஷீன் கூறுகின்றார்.

கிறிஸ்துவுக்குப் பின் அப்போஸ்தலரின் வழிவரும் ஆயர்களும், அவர்களின் துணையாளராக வரும் குருக்களும் இயேசுவின் குருத்துவத்தை இன்றைய காலத்துள் கொணர வேண்டும். அறிவுப் பூர்வமாக மட்டுமல்ல, உணர்வுப்பூர்வமாகவும், அனுபவப்பூ -ர்வமாகவும் கொணர வேண்டும். அறிவார்ந்த செய்தி நமக்கு நிறையவே உண்டு, குறிப்பாக மேற்கத்திய போக்கைப் பின்பற்றுகி -றவர்களுக்கு; ஆனால் அனுபவமோ மிகக் குறைவு. எடுத்துக்காட்டாக செபத்தைப் பற்றி நிறையவே அறிந்திருக்கின்றோம். அந்த அளவுக்கு செபத்தை அனுபவிக்கின்றோமா என்பது கேள்விக்குறியே. உணர்வுப்பூர்வமாக, தன்னிலை அனுபவமாக கிறிஸ்துவின் குருத்துவத்தைக் காலத்துள் கொணர்வது எப்படி? விவிலியத்திலிருந்தே இதற்குப் பதில் காண்போம். மாற்கு நற்செய்தியாளர், இயேசு



தனது பன்னிரு அப்போஸ்தலர்களை அழைத்ததின் நோக்கத்தை இவ்வாறு குறிப்பிடுகின்றார். அதன் பின்பு இயேசு மலைமேல் ஏறித் தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார். அவர்களும் அவரிடம் வந்தார்கள். தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும், பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் அவர் பன்னிருவரை நியமித்தார். அவர்களுக்குத் திருத்தூதர் என்று பெயரிட்டார்" (3:13-15). தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்றவும் அதன் வெளிப்பாடாக பேய்களை ஓட்டவும் கிறிஸ்து அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார். தம்மோடு இருக்கவும், அதாவது உணர்வுப்பூர்வமாக கிறிஸ்துவின் மனநிலையை அறிந்தால் மட்டுமே உணர்வுப்பூர்வமாக அவருடன் இணைய முடியும். "கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்! கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே எற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்" (பிலிப் 2:5-8)


கிறிஸ்து தம்மையே வெறுமையாக்கினார். தந்தைக்கு அனைத்திலும் கீழ்ப்படிந்திருந்தார். அக்கீழ்ப்படிதல் அவரைச் சிலுவைச் சாவுக்கு இட்டுச் சென்றது. இதற்கு தன் உடலையே கருவியாக்கினார். அதனால்தான் கிறிஸ்து உலகிற்கு வந்தபோது "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஆனால் ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எரிபலிகளும், பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல. எனவே நான் கூறியது: என் கடவுளே உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறேன். என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது" என்கிறார் (எபி. 10:5 - 7). ஆம் கிறிஸ்துவின் மனநிலை, தன் தந்தை மீதும், மக்கள் மீதும் கொண்ட அன்பின் காரணமாக தன்னையே வெறுமையாக்குவதிலும், அதற்கு மனுவுரு எடுத்ததிலும், அம்மனித உடலையே சிதைத்து பிட்டுக் கொடுப்பதிலும் அடங்கியுள்ளதைக் காணமுடிகிறது. எனவே நம் குருவாகிய கிறிஸ்துவை காலத்துள் கொணர அழைக்கப்பட்டிருப்போர், அதாவது இன்றைய ஆயர்களும், குருக்களும் தங்களையே வெறுமையாக்க வேண்டும். விரும்பி வெறுமையாக்க வேண்டும். விரும்பி தங்களையே வெறுமையாக்காதவர்கள் உண்மை ஆயர்களாக, குருக்களாக இருக்க முடியாது. குருவாம் கிறிஸ்துவை ஒரு நாளும் காலத்துள் கொணர முடியாது. எனவே வெறுமையே குருக்களின் ஆதாரச் சொத்து.

கிறிஸ்து கொண்டிருந்த மனநிலை, ஒரு கட்டாயத்தினால், தன் இயலாத் தன்மையால் உருவான ஒன்றல்ல. மாறாக தானே விரும்பியதால் உருவான மனநிலை. வெறுமையிலும், தன் சொந்த அதிகாரத்தினால், வல்லமையால் செயல்பட்டார் என்பதற்கு நற்செய்தியில் பல எடுத்துக்காட்டுகள் காணக்கிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம். இயேசு ஒருமுறை உரையாற்றி முடித்தபோது, "அவரது போதனைகளைக் கேட்ட மக்கள் கூட்டத்தினர் வியப்பில் ஆழ்ந்தனர். ஏனெனில் அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி அதிகாரத்தோடு அவர்களுக்குக் கற்பித்தார்" (மத் 7:28-29). "யாரோ ஒருவர் என்னைத் தொட்டார். என்னிடமிருந்து வல்லமை வெளியேறியதை உணர்ந்தேன்" (லூக் 8:46) "விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும், ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா" (லூக் 21:33). "இவர்கள் பேசாதிருந்தால் கற்களே கத்தும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார் (லூக் 19:40). "எந்த அதிகாரத்தால் இவற்றைச் செய்கிறேன் என்று நானும் உங்களுக்குக் கூறமாட்டேன்" என்றார் (மாற்கு 11:33). யூதர்கள் அவரைப் பார்த்து இவற்றையெல்லாம் செய்ய உமக்கு உரிமை உண்டு என்பதற்கு நீர் காட்டும் அடையாளம் என்ன?" என்று கேட்டார்கள். இயேசு மறுமொழியாக அவர்களிடம் இக்கோயிலை இடித்துவிடுங்கள். நான் மூன்று நாளில் இதைக்கட்டி எழுப்புவேன் என்றார். அப்போது அவர்கள், இந்த கோயிலைக் கட்ட நாற்பத்தாறு ஆண்டுகள் ஆயிற்றே! நீர் மூன்றே நாளில் இதைக்கட்டி எழுப்பிவிடுவீரோ என்று கேட்டார்கள். ஆனால் அவர் தம் உடலாகிய கோயிலைப் பற்றியே பேசினார் (யோவா 2:18-21). இயேசு ஒருமுறை மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என் மேல் எந்த அதிகாரமும் இராது, என்றார் பிலாத்திடம் (யோவா 19:11). மேற்கூறிய கூற்றுகளில் காணப்படும் வல்லமை, அதிகாரம், துணிவு கிறிஸ்துவில் உள்ளார்ந்தவை. வெளியரங்கமானவை அல்ல. தன்னுடைய அப்பா அனுபவத - திலிருந்து பிறந்தவை. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# இயேசுவுக்கு சான்று பகரும் குருத்துவம்

"நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மகிமை" (யோவா 15:8) என்கிறார் ஆண்டவர்.

சீடத்துவம் என்பது யேசுவோடு உடனிருப்புக்கான ஓர் அழைப்பு. அது மாபெரும் கொடை. யேசு தாம் விரும்பியவர்களை தம்மோடு இருக்கவும். நற்செய்தியை அறிவிக்கவும் (மாற் 3:13) அழைத்தார். சீடர்களுடைய நோக்கும், போக்கும் கிறஸ்துவை சார்ந்ததாக மட்டுமே இருக்க வேண்டுமே ஒழிய வேறெதுவும் அவர்களுக்குத் தேவையில்லை.



அரசாங்கத்தில் ஊழியராவது அன்றாட உணவிற்காக, ஆண்டவருக்கு ஊழியராவது அன்பைப் பரப்பிட. நற்செய்தி அறிவிப்பென்பது அனைவரின் பணி. இருந்தும் ஆண்டவர்

கி. அருளப்பு, விடத்தல்தீவு

ஒருசிலரைத் தேர்ந்தெடுக்கின்றார். ஆண்டவரின் ஊழியத்தில் ஓய்வு நாள் இல்லை, இது பகுதி நேரவேலை இல்லை, சம்பள உயர்வில்லை, பதவி உயர்வும் இல்லை, ஆனால் தீமையோடு போராட வேண்டும். இயேசுவுக்கு சான்றுபகரும் போது பலவிதமான எதிர்ப்புகள், முட்டுக்கட்டைகள், எதிர்பார்ப்புக்கள், சவால்கள் பிரச்சனைகள் ஏராளம். அவைகளை எதிர்கொண்டு வெற்றிபெற இறை மக்களாகிய நாம் எம்முடைய நாளாந்த செபங்களாலும் வேண்டுதல்களாலும் இறைபணியாளர்களுக்குத் தேவையான ஆன்மீக ஒத்தாசைகளை அளிக்கவேண்டும். இதற்காக இவ்வாண்டை திருச்சபை எமக்கு அளித்திருக்கிறது.

பூக்கும் பூவெல்லாம் மாலையில் கோர்க்கப் படுவதில்லை. கோர்க்கும் போது சில சிந்துவதும் உண்டு. சிந்தப்படுபவைகள் காலால் மிதிபடுவதும் உண்டு. அவ்வாறே அழைத்தலும், ஊழியமும். அழைக்கப்பட்ட வர்களில் எல்லோரும் தேர்ந்து கொள்ளப்படுவதில்லை. தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் எல்லோரும் நிலைத்திருப்பதும் இல்லை. எல்லோருக்கும் அழைப்பு உண்டு. ஆண்டவரின் ஊழியத்தில் இலக்கும் செய்தியும் ஒன்றே. இயேசுவே இலக்கும் நற்செய்தியும். இது பணிக்குருத்துவம் ஆனாலும் சரி, பொதுக்குருத்துவம் ஆனாலும் சரி, எல்லோருக்கும் ஒன்றே.

இவற்றை நான் ஏற்கனவே அடைந்துவிட்டேன் என்றோ, நிறைவெய்து விட்டேன் என்றோ சொல்வதற்கில்லை. கிறிஸ்து யேசு என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேறுவதற்காக தொடர்ந்து ஓடுகின்றேன். அன்பர்களே இன் நோக்கம் நிறைவேறி விட்டது என நான் எண்ணவில்லை. ஒன்று மட்டும் செய்கிறேன். கடந்ததை மறந்துவிட்டு முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு பரிசுபெற வேண்டிய இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன். இது யேசுவின் மூலம் கடவுள் எனக்கு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# புனித வின்சன் டீ போல் தேசிய சபையினரின் கருத்தரங்கு

தகவல் திருமதி. ஏபிரகாம் சொய்சா

இலங்கை புனித வின்சன் டீ போல் தேசிய சபையினரின் இரு நாள் கருத்தரங்கும், மாதாந்தக் கூட்டமும் 2010 மாசி 26,27,28 ஆகிய தினங்களில் தேவத்த தியான இல்லத்தில் நடைபெற்றது. கொழும்பு, இரத்தினபுரி, குருநாகல், நீர்கொழும்பு, சிலாபம், கண்டி, மாத்தளை நாகம, கடுகண்ணாவ, மன்னார், திருகோணமலை, கல்முனை ஆகிய இடங்களிலிருந்து, மத்தியசபை, பிராந்திய சபையின் தலைவர்கள் இத்தியானத்தில் கலந்து கொண்டனர்.

26ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை தேசியசபை ஆன்மீக இயக்குனர் அருட்பணி லியோ பெரேரா அவர்களின் இறை ஆசிருடன் இத்தியானம் ஆரம்பமானது.

யேசுசபைக் குருக்களான அருட்பணி லசந்தா, அருட்பணி றஞ்சித் ஆகியோர் கருத்தரங்கை நடாத்தினார்கள். 1948ல் இருந்து 2009வரை இலங்கையில் நடைபெற்ற ஆட்சிமுறையில் சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், புறக்கணிப்பு, அவமதிப்பு, உரிமை மீறல்கள், சித்திரவதைகள், மனிதப்படுகொலைகள், பயங்கரவாதம், கோரயுத்தம், என்பன பற்றியும் 2009 வைகாசி 19ல் யுத்தம் முடிவுற்ற பின்னும் இன்றுவரை தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்ற அகதி வாழ்வு, அடிமை வாழ்வு, இடப்பெயர்வுகளினால் அனுபவித்து வரும் துன்பங்கள், இன்னும் விடுதலை செய்யப்படாமல் சிறைவாசம் அனுபவித்து வரும் தமிழ் இளைஞர்கள், யுவதிகளின் அவலநிலைகள் போன்றன பற்றியும் விவிலியக் கண்ணோட்டத்தில் எடுத்துரைத்த அருட்பணி லசந்தா அடிகள் நமது இரக்க சேவை என்ன? என்ற கேள்வியோடு தனது உரையை முடித்துக் கொண்டார்.

அருட்பணி றஞ்சித் அடிகள் தற்போதைய கால கட்டத்தில் புனித வின்சன் டீ போல் சபையினர் எவ்விதமான பணிகளை ஆற்றலாம் என்பதை விளக்கிக் கூறினார். மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்காக விசேடமாக பிரார்த்தனையும் செய்யப்பட்டது.

# இலங்கை கிளரீசியன் துறவறசபையின் புதிய குரவர்கள்

### அருட்சகோதரர் அன்ரனி பெணான்டோ


இவர், திரு. திருமதி செபமாலை அந்தோனி, மதலமரி தம்பதிகளின் மகனாக 17.08.1977 அன்று அம்பேவல என்னும் இடத்தில் பிறந்தார். பிளக்பூல் பங்கைச் சேர்ந்த இவர் தனது ஆரம்ப கல்வியை தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரியிலும், உயர் கல்வியை கண்டி புனித சில்வஸ்ரர் கல்லூரியிலும் நிறைவு செய்து நீர்கொழும்பு கட்டுவ புனித கிளாரட் சிறிய குருமடத்தில் பாதம் பதித்தார். கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியல், இறையியல் குருத்துவக் கல்வியை நிறைவு செய்து மெய்யியல்மாணி, இறையியல்மாணிப் பட்டங்களைப் பெற்றார். 24.10.2009அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் கடந்த 13.04.2010 அன்று கிளரீசியன் துறவறசபைக் குருவாக நுவரெலியா புனித சவேரியார் ஆலயத்தில் கண்டி மறைமாவட்ட ஆயர் அதி. வண. வியானி பெணான்டோ ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

### அருட்சகோதரர் றொனால்ட் சுஜீவன்

இவர், திரு.திருமதி ஜெரோம் டீ சாலா, பிலோமினா சலேட் மேரி தம்பதிகளின் மகனாக 27.09.1981 அன்று நீர்கொழும்பில் பிறந்தார். குடாப்பாடு பங்கைச் சேர்ந்த இவர் தனது ஆரம்ப கல்வியை மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியிலும், உயர் கல்வியை கண்டியிலும் நிறைவு செய்து நீர்கொழும்பு கட்டுவ புனித கிளாரட் சிறிய குருமடத்தில் பாதம் பதித்தார். கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியல், இறையியல் குருத்துவக் கல்வியை நிறைவு செய்து மெய்யியல்மாணி, இறையியல்மாணிப் பட்டங்களைப் பெற்றார். 24.10.2009அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் கடந்த 23.04.2010அன்று கிளரீசியன் துறவறசபைக் குருவாக நீர்கொழும்பு புனித செபஸ்ரியார் ஆலயத்தில் திருமலைமட்டு மறைமாவட்ட ஆயர் அதி.வண. கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்டார். **(இவர்கள் பணி சிறக்க மன்னா வாழ்த்தி மகிழ்கின்றது.)**

## உலகத்திருச்சபை செய்திகள்

# "குருக்களே, ஒப்புரவு அருட்சாதனத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள்"



இந்த குருக்கள் ஆண்டில் அனைத்து அருட்பணியாளரும் புனித ஜான் மரிய வியான்னியின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி ஒப்புரவு அருட்சாதனத்திற்கு தங்களது மேய்ப்புப் பணியில் முக்கியத்துவம் கொடுக்குமாறு திருத்தந்தை வலியுறுத்தியுள்ளார். அப்போஸ்தலிக்க பாவ மன்னிப்பு நிறுவனம் நடத்திய வகுப்புக்களில் கலந்து கொண்ட குருத்துவ பிரதிநிதிகளை வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார். குருக்கள் தங்களின் அழைப்பை மிக உன்னத விதத்தில் வாழ வேண்டும். ஏனெனில் இவ்வாறு வாழ்வதன் வழியாக ஆண்டவரின் பிரசன்னத்திற்குத் தெளிவான சான்றுபகர முடியும். 'தான்' என்ற கோட்பாடு மற்றும் 'தான் சொல்வதே சரி' என்ற மன நிலையைக் கொண்ட ஒரு கலாசாரச் சூழலில் வாழ்ந்து வரும் குருக்கள் ஒவ்வொரு நாளும் தங்களின் வாழ்வில் கிறிஸ்துவின் பிரசன்னத்தைப் பிரதிபலிப்பது இன்றியமையாதது என்றும் திருத்தந்தை கோடிட்டுக் காட்டினார்.

# இளையோரின் உலக மாநாட்டில் மாற்றுத் திறனுடையோரும் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள்

ஸ்பெயினின் மாட்ரித் நகரில் 2011ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் இளையோரின் உலக மாநாட்டில் செவித்திறன், பேச்சுத்திறன் இழந்த இளையோரும் முழுமையாகப் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக இம்மாநாட்டினை ஏற்பாடு செய்துவரும் அமைப்பின் தொடர்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். உலகில் இன்று பேச்சு வழக்கில் உள்ள பல்வேறு மொழிகளைப் பேசுவோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு வசதிகள் செய்யப்படுவது போல, மொழிகள் பேச முடியாதவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்க முடியும் என்று சொல்லப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஐக்கிய நாட்டு அங்கிலிக்கன் கிறிஸ்தவ சபை கத்தோலிக்க திருச்சபையில் இணைவதற்கு தீர்மானம்!

திருத்தந்தை கடந்த நவம்பரில் உலக அங்கிலிக்கன் கிறிஸ்தவ சபையினருக்கு விடுத்திருக்கும் அழைப்புக்குப் பதில் அளிக்கும் விதமாக அமெரிக்க ஐக்கிய நாட்டு பாரம்பரிய அங்கிலிக்கன் கிறிஸ்தவ சபைத் தலைவர்கள் கத்தோலிக்கத் திருச்சபையில் முழுவதுமாக இணைவதற்கு விண்ணப்பித்துள்ளனர். அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆர்லேன்டாவில் கூடிய பாரம்பரிய அங்கிலிக்கன் கிறிஸ்தவ சபைத் தலைவர்கள், கத்தோலிக்கத் திருச்சபையில் முழுவதும் இணைவதற்குத் தீர்மானித்துள்ளனர் ஏ.சி.ஏ. எனப்படும் அமெரிக்காவின் அங்கிலிக்கன் சபை. இந்தச் சபையில் 5200பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இந்தப் பாரம்பரிய அங்கிலிக்கன் கிறிஸ்தவ சபை கூட்டமைப்பில் உலகெங்கும் சுமார் நான்கு இலட்சம் பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். ஆஸ்திரேலிய அங்கிலிக்கன் கத்தோலிக்கத் திருச்சபைக்குத் தலைவரான பேராயர் ஜான் ஹெப்வொர்த் இந்தக் கூட்டமைப்பின் தலைவராவார்.

# "மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தாதீர்!"

வன்முறை, பாகுபாட்டு நிலைகள் மற்றும் அரசியல் ஆதாயங்களை நியாயப்படுத்த மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்கு எதிராகத் தங்கள் குரலை எழுப்பியுள்ளனர் இஸ்லாம் மற்றும் கத்தோலிக்கப் பிரதிநிதிகள். மதங்களுக்கிடையேயான பேச்சு வார்த்தைகளுக்கான அவையின் அங்கத்தினர்களுக்கும் சன்னி இஸ்லாமியர்களின் அல் அஸ்ரே நிரந்தர அவையின் அங்கத்தினர்களுக்கும் இடையே அண்மையில் எகிப்தின் கெய்ரோவில் இடம்பெற்ற கூட்டத்தின் இறுதியில் இத்தீர்மானம் அறிவிக்கப்பட்டது. இத்திருப்பீட அவையின் தலைவர் கர்தினால் ஜுான் லூயிஸ் தவ்ரன் மற்றும் சன்னி இஸ்லாமியத் தலைவர் ஷெய்க் முகமத் அப்துல் அசிட் வாசில் இணைந்து கையெழுத்திட்ட இத்தீர்மான அறிக்கை சுய ஆதாயங்களுக்காக மதத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறது.

2ம் பக்க தொடர்ச்சி.........

### *"கல்வாரியில் கருணை .........*

இவ்விடயம் இந்நாடக நிகழ்வில் பெரிதும் கவனம் கொள்ளப்படவில்லை. "இயேசு இரத்த வெள்ளத்தில் மிதக்கிறார் என பாட்டுத்தான் படிக்கிறாங்க... இரத்தத்த காணல்ல..." எனும் குரல் ஒன்று ஒலிவாங்கியிலேயே ஒலித்து இந்த விடயத்தை அம்பலப்படுத்தி இயேசு துன்பத்தில் துடிக்கும் போது சுவைஞர்கள் சிரிப்பொலி எழுப்ப காரணமாயமைந்து விசுவாச இரசனையை வேறுபக்கம் திருப்பிற்று.

இயேசு கெத்சமனி தோட்டத்தில் இரத்த வியர்வை வியர்க்க வேண்டுதல் செய்த போது விண்ணகத்திலிருந்து ஒரு தூதர் அவருக்குத் தோன்றி அவரை வலுப்படுத்தினார். லூக் 22:43) என்று நான்கு நற்செய்தியாளர்களில் புனித லூக்கா மட்டும் குறிப்பிடுகின்றார். இக்காட்சி நிகழ்வில் காட்டப்பட்டது. அவ்வாறு தூதரால் தேற்றப்பட்ட பின்னரும் சீடர்களிடம் திரும்பிச் செல்கின்ற இயேசு மிகுந்த வேதனைப்பட்டு பலமாக அழுவதாக காட்டப்படுவது தூதர் தேற்றியதை அர்த்தமற்றதாக ஆக்கி நிற்கிறது.

திருப்பாடுகளின் காட்சியிலே கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டிய ஒரு விடயம் இயேசு உயிர் நீத்தபின்னர் நூற்றுவ - தலைவனும், ஏனையவர்களும் வழங்கிய சாட்சியம். இதுபற்றி நான்கு நற்செய்தியாளர்களுமே குறிப்பிட்டுள்ளனர். மத்தேயு 28:54, நூற்றுவர் தலைவரும் அவரோடு இயேசுவை காவல் காத்தவர்களும் நிலநடுக்கத்தையும் நிகழ்ந்த யாவற்றையும் கண்டு மிகவும் அஞ்சி "இவர் உண்மையாகவே இறைமகன்" என்றார்கள். இதனை மாற்கு 16:39, லூக்கா 24:47, யோவான் 20:35ல் வாசிக்கின்றோம். மிக முக்கியமான தலைவனின் சாட்சியம் கல்வாரியில் கருணை மழையில் இடம்பெறவில்லை. இது கட்டாயம் உள்ளடக்கப்பட வேண்டியது.

சனரஞ்சகத்திற்காக நடனங்கள் உள்ளடக்கப்படுவது நிகழ்ச்சிக்கு உத்வேகம் ஊட்டத்தக்கது. ஆனாலும் அதில் பொருத்தப்பாடு காணப்படவேண்டுமேயன்றி வலிந்து புகுத்தப்படலாகாது. ' சமாரியப் பெண்ணிடம் குடிக்க நீர் கேட்கும் காட்சி. இதில் நீர் மொள்ளச் செல்கின்ற சமாரியப் பெண்கள் கையில் குடங்களுடன் நடனமாடிச் செல்வது விவிலியத்தை ஆழமாக கற்றவர்கள், அறிந்தவர்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கு - கின்றது!. சமாரியரது கலாசாரம் யூதகலாசாரமே. அங்கு பெண்கள் முக்காடிட்டுமுகத்தை மூடிக்கொள்வதுடன் ஆண்களை ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள். இயேசு சமாரியப் பெண்ணுடன் கதைப்பதைக் கண்ட சீடர்கள் ஆச்சரியப்படுவதாக வாசிக்கின்றோம். அவ்வாறான ஒரு கலாசாரத்தை மேடையில் காட்சிப்படுத்தும் போது அவதானத்துடன் முன்னெடுத்திருக்கப் பட்டிருக்க வேண்டும்.

ஒளியமைப்பும் ஒலி அமைப்பும் நிகழ்வு ஒன்றின் வெற்றிக்கான தூண்கள். அவை பிசகும் போது முழு நன்மைத்தனங்களும் சிதறிவிடும். ஒளியமைப்பு நன்றாக அமைந்ததுபோல் ஒலி அமைப்பு அமையவில்லை. மட்டுமன்றி மேடையின் முன்பகுதியில் நாடகத்திற்கு ஒத்தாசை புரிபவர்கள் நடமாடுவதற்காக அமைக்கப்படும் மறைவிடம் நடமாடுபவர்கள் சுவைஞர்களின் இரசனையின் கவனக்கலைப்பான்களாக அமையாவண்ணம் அம்மறைவிடம் சரியான உயரத்தில் அமைக்கப்பட வேண்டியது அவசியம்.

நாடகத்தின் நீட்சியும், நேரமும் மிக முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டியவை. நேரம் செல்லச் செல்ல சுவைஞனின் இரசனைத் தன்மை இறங்குவரிசையில் சென்றுவிடும். ஏறக்குறைய ஐந்து மணித்தியாலங்களை உள்ளடக்கிய இந்நிகழ்ச்சியில் பிற்பகுதி நிகழ்ச்சிகள் சுருக்கப்பட்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக இயேசுவின் கல்லறையைத் தேடி ஓடும் மரியமதலேனாள். இவ்விடத்தில மதலேனாளிடம் மட்டுமன்றி பார்வையாளர்களிடம் அச்சம், ஆச்சரியம், எதிர்பார்ப்பு (Curiosity) கலந்த ஓர் உணர்வு காணப்படுமேயன்றி கல்லறை நோக்கி நடனமாடிச் செல்லும் உணர்வு ஏற்படாது. சலிப்பை ஏற்படுத்தும் வண்ணம் அமைந்த அந்நடனம் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

சோகரசம் ததும்பும் பக்தி நாடகத்தில் தொடர்ந்தேர்ச்சியாக பாடல்களின் மூலம் செய்திகளை சுவைஞர்களுக்குச் சொல்வதைவிட மனதில் பதிந்து மனதை ஊடுருவும் ஆழமான எளிமையான வார்த்தைப் பிரயோகம் மிகவும் பயன்தரத்தக்கது. மட்டுமன்றி பாரிய இப்பணியின் பொறுப்புக்கள் பகிரப்பட வேண்டியவை. நெறியாளர் ஆரம்ப முதல் முடிவுவரை பெரும் சிரமங்களுக்கு உள்ளானதைக் காணமுடிந்தது. பொறுப்புக்கள் நன்கு பகிரப்பட்டு பொருத்தமான விதத்தில் நெறியாள்கை செய்யப்பட்டிருக்கலாம். கல்வாரியில் கருணை மழை எனும் பாரிய நிகழ்வு ஒன்றின் மனப்பதிவுகள் இவை. இத்தகு நிகழ்வுகள் ஆதியும் அந்தமுமில்லா இறைவனுடன் காலா காலத்திற்கும் நிலைத்திருப்பவை. இவை எதிர்காலங்களில் சீர்செய்யப்படல் வேண்டும். சீர்செய்யப்படும் போது சுவைஞன் மீதான அதன் செல்வாக்கு புலமடங்கு அதிகரிக்கும்.

## வாழ்வு தரும் வார்த்தை

# உப்பின் சாரம் ஒளியின் வெளிச்சம்


அருட்தந்தை அந்தோணி பெனடிக்ட்

குருவும் சீடரும் ஆற்றங்கரையோரம் நடந்து சென்றனர். தண்ணீரில் சிக்கிய தேள் ஒன்று ஆற்றிலிருந்து கரையேறத் தத்தளித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு முறை அது கரை எட்டும் போதும் ஆற்றின் சிற்றலை அதன் மீது மோதி தேளை உள்ளே இழுத்தது. மறுபடியும் முயற்சி செய்து கரையை எட்டும் போது தேளை வேறொரு சிற்றலை ஆற்றுக்குள் இழுத்தது. அதைச் சற்று நேரம் உற்றுக் கவனித்த குரு தேளுக்கு உதவ முன்வந்தார்.குனிந்து தண்ணீரில் மிதந்துகொண்டிருந்த தேளை தன் கையால் தூக்கினார். அவரது உள்ளங்கையில் வந்த தேள் அவரைக் கொட்டியது. வலி தாங்க முடியாமல் கையை உதறுகையில் தேள் அவர் கையிலிருந்து தண்ணீரில் விழுந்தது. மீண்டும் தேளைத் தூக்கினார். மீண்டும் கொட்டியது. வலி தாங்க முடியாமல் குரு கையை உதறினார். தேள் மறுபடியும் தண்ணீரில் விழுந்தது. மூன்றாம் முறையும் தேளைத் தூக்குவதற்காக தண்ணீரில் கைவிட்ட குருவை சீடர் தடுத்தார். ஏற்கனவே இரண்டு முறை உம்மைக் கொட்டிவிட்டது. மூன்றாம் முறையும் தேள் உம்மைக் கொட்டும், தெரியாதா, அதற்கு ஏன் உதவுகிறீர்? என்றார். குரு சொன்னார், "தேளின் இயல்பு கொட்டுவது. என் இயல்போ அதற்கு உதவுவது. அது அதன் இயல்பில் செயல்படுகிறது. நான் என் இயல்பில் செயற்படுகிறேன்".

நம் செயல்கள் எங்கிருந்து பிறக்கின்றன? யார் நம்மைச் செயல்பட வைக்கின்றார்கள்? எது நம்மைச் செயல்படத் தூண்டுகிறது? சில செயல்களைப் பழக்க வழக்கத்தின் காரணமாகச் செய்கிறோம். சிலவற்றை நாமே விரும்பி, விருப்பத்தின் காரணமாகச் செய்கிறோம். சிலவற்றை எதிர்செயலாக, எதிர் வினையாகச் செய்கிறோம். (ஒருவர் நம்மைத் திட்டும் போது நாம் அவரை திருப்பித் திட்டுவது எதிர்வினை, எதிர்ச் செயல், காரணமாகத்தான்). சில வேளைகளில் பிறருக்குப் பயந்தோ, பாராட்டுக்காகவோ, பிறரின் தயவைப் பெறுவதற்காகவோ அல்லது அவருக்காக இதைச் செய்துதான் ஆகவேண்டும் என்ற கட்டாயத்தாலோ, செயல்களைச் செய்கிறோம். இவ்வாறு செயல்களைச் செய்வது நாமாக இருந்தாலும் பல வேளைகளில் ஏதாவது ஒன்றினாலோ அல்லது யாராவது ஒருவராலோ ஆட்கொள்ளப்பட்டுச் செயல்களைச் செய்கிறோம். எதனாலும் ஆட்படாமல், யாருடைய கட்டாயத்திற்கும் உட்படாமல் நாமாக உணர்ந்து இயல்பாகச் செய்பவை ஒரு சில தான்.

நாம் யாரென்று நம் இயல்பை உணராதவரை நம் செயல்கள் இயல்புச் செயல்கள் ஆவதில்லை. நம்மை நாம் முழுமையாக நம் இயல்பில் உணர்ந்து ஏற்க வேண்டும். இல்லையேல் நம்மைச் சூழ்ந்துள்ள நபரால், பொருளால் அல்லது சூழ்நிலையால் எளிதாக ஆட்கொள்ளப்படுவோம். பிறகு எதனால் நாம் ஆட்கொள்ளப்படுகிறோமோ அதுவே நம் இயல்பாக மாறிவிடும். நம் சொந்த இயல்பே வெளியிலிருந்து நம் மேல் திணிக்கப்பட்ட இயல்பாகி விடும். நாம் வாடிக்கையாக்கிக் கொண்ட அல்லது நம்மை ஆட்கொண்ட பண்புகளை வாழ்ந்து கொண்டிருப்போம்.

கழுகு முட்டை ஒன்று தவறி கோழி முட்டைகளோடு கலந்து விட்டது. அதன் மேல் அமர்ந்த கோழி கழுகு முட்டையையும் சேர்த்தது. கழுகுக் குஞ்சும் முட்டையை உடைத்துக் கொண்டு வெளிவந்து வாழ்வைத் துவங்கியது. தனது வாழ்வுக்குத் தேவையான அனைத்தையும் தன்னுடன் வாழும் கோழிக் குஞ்சுகளிடமிருந்து கற்றுக்கொண்டு, ஒரு கோழியாக வாழ்ந்தது. ஒரு நாள் உயரப் பறந்த கழுகு ஒன்றைப் பார்த்த போது, அது தாய் கோழியிடம் கேட்டது, "ஆமா, இவ்வளவு உயரத்தில் பறக்கும் கழுகு போல் நான் பறக்க முடியாதா?" அதற்குத் தாய் கோழி "அது கழுகு, நாம் கோழிகள், கழுகு அவ்வளவு உயரத்தில் பறக்க முடியும். நாமோ இப்படி நிலத்தைக் கிளறி நடந்து ஓடி வாழ வேண்டியவர்கள்தான்" என்றது. கோழியுடன் கூடி வாழ்ந்த கழுகு தன் இயல்பை உணர வாய்ப்பின்றி கோழியாகவே வாழ்ந்தது. நம் நிலை அப்படி அல்ல. எல்லாச் சூழ்நிலைகளிலும், எவ்வித எதிர்ச்சூழ் நிலைகளிலும் கூட நம் இயல்பை நாம் உணர்ந்து வாழக்கூடிய தனித்தன்மை பெற்றிருக்கிறோம். அவ்வாறு நம் இயல்பை உணர்ந்து அதை வாழ்வதே மனித வாழ்வு. "மண்ணுலகிற்கு நீங்கள் உப்பாய் இருக்கிறீர்கள்" (மத்தேயு 5:13) என்றார் இயேசு. சாரம் (உவர்ப்புத் தன்மை) இருக்கும் வரைதான் அது உப்பு. சாரம் போய்விட்டால்



"எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்?" சாரம் இல்லாத உப்பு வெறும் குப்பைதான். "அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும், வேறு ஒன்றுக்கும் உதவாது".

நாம் உப்பு என்றால் நமது இயல்புதான் உவர்ப்புத் தன்மையாகிய சாரம். நமது இயல்பை இழந்துவிட்டால் அதாவது நமது இயல்பை வாழத் தவறினால் நாம் சாரமற்ற உப்பைப் போன்ற குப்பைதான். குப்பை வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும். நம் இயல்பை நாம் வாழாதபோது, குப்பையாகிப் போகிற நாம் பிறரால் மிதிபட்டு அவரின் அடிச்சுவட்டைத்தான் தாங்கி நிற்போம். நம் இயல்பின் சுய தோற்றமாக, சாரமுள்ள, சுவை தரும் உப்பைப் போன்ற இயல்பு வாழ்க்கையாக நம் வாழ்வு இருக்காது.

நம் இயல்பு எது என்று அதை உணராதவரை நாம் கோழிக் குஞ்சுகளோடு கலந்த கழுகு போன்றவர்கள்தான். பிறருடைய பாதிப்புக்கு ஆளாகி அவரைத்தான் பிரதிபலிப்போம். நம் சொந்த தீபமாக ஒளிவீச மாட்டோம். அவருடைய நகலாகத்தான் இருப்போமே தவிர நம்முடைய அசலாக இருக்க மாட்டோம். சாரத்தை நாம் இழந்தால் நாம் பிறரால் மிதிபடும் குப்பை. அவருடைய காலடி அச்சைத்தான் தாங்கி நிற்போம். பிறரின் எண்ணங்கள் விருப்பங்கள் கட்டளைகள் இவைகள் நம்மேல் திணிக்கப்பட்டு அவருடைய அச்சாகவே வாழ்ந்து கொண்டிருப்போம். நம் அசலை வாழவில்லை என்றால் பிறரின் நகல்தான் நம்மேல் பதிக்கப்படும். நம் இயல்பின் சுய தோற்றத்தை நாம் வாழத் தயங்கும் போது பிறரின் ஆளுமைத் தோற்றத்தால் அடக்கப்படுவோம். நம் இயல்பை நாம் விட்டுக் கொடுக்கும்போது தான் நாம் சாரமற்றுப் போகிறோம். நம் இயல்பைத் துணிந்து வாழவிடும் போது தான் நாம் சாரத்தோடு சுவைமிக்கவராக மாறுகிறோம்.

இயல்புக்கு உப்பை உவமையாகக் கூறிய இயேசு உடனே "உலகிற்கு ஒளி நீங்கள்" (மத் 5:14) என்று அடுத்த அடையாளத்தைக் காட்டி இயல்பை விளக்குகிறார். "மலைமேல் இருக்கும் நகர் மறைவாய் இருக்க முடியாது". ஒளி தன்னை மறைக்க முடியாது. எங்கிருந்தாலும் தன்னிருப்பைக் காட்டிக் கொடுத்துவிடும். நம் இயல்பு ஒளி என்றால் அது மறைந்திருக்க முடியாது. தன்னிருப்பைக் காட்டிக்கொண்டேதான் இருக்கும். நாமாக வலிய முயன்று அதை மறைக்க வேண்டும் அல்லது அணைத்தாக வேண்டும். இல்லையேல் நம் இயல்பு, தானிருப்பதை நமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கும். ஒளியான இயல்பின் இருப்பை ஒருவர் உண்மையாக உணர்ந்தாரென்றால் அந்த இயல்பில் இசைவாக பிரகாசிக்க ஆரம்பித்துவிடுவார். அவராக வலிய முயன்று அதைக் கொன்றால் ஒழிய அவர் இயல்பு அவரில் ஒளிவீசிக் கொண்டே இருக்கும்.

"எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை. மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்போதுதான் அது வீட்டில் உள்ள அனைவருக்கும் ஒளி தரும்". நமக்குள் நமது அசலான இயல்பை வைத்து நம்மைப் படைத்த இறைவன், நாம் ஒளிரவே படைத்துள்ளார். நாம் நம் இயல்பில் ஒளிர வேண்டியவர்கள், மரக்காலுக்குள் ஒளிந்து கொள்பவர்கள் அல்ல.

"உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க". இதுதான் இறைச் சாயலை நமது இயல்பாகப் பெற்றிருக்கும் நம்மிடம் இறைவன் விரும்புவது. இது தான் நம் ஒளி மனிதர் முன் ஒளிர வேண்டும். நம் இயல்பை மரக்காலுக்குள் வைத்து மறைப்பதும், விளக்குத் தண்டின் மீது வைத்து ஒளி பரப்புவதும் நம்மைச் சார்ந்தது.

நாமாக நமது இயல்பாக ஒளிர வேண்டும். இல்லையேல் மரக்காலுக்குள் மூடப்பட்ட இயல்பாக இருண்டுவிடுவோம். நம்மை நாம் நமது இயல்பாக எரித்து ஒளிராத போது, பிறர் நம்மை அவர் விருப்பத்திற்கு ஏற்ப எரிப்பதற்கு விட்டுக்கொடுத்துவிடுவோம்.

நம் இயல்பின் தன்மையே இதுதான்.

நாம் நம் இயல்பின் சுயதோற்றமாக எரிந்து ஒளிர வேண்டும். இல்லையேல் பிற ஆள், பொருள் அல்லது சூழ்நிலைச் சக்திகளால் எரிக்கப்படுவோம். பிறகு எதனால் எரிக்கப்படுகிறோமோ அதுவாகவே எரிவோம். அதனுடைய பிரகாசத்தையே வீசுவோம். நாம் ஒளிரத் தயங்கும் போது பிறர் தேவைக்காக நாம் எரிக்கப்படுவோம்.

நாமாக எரிவோம். நம் இயல்பாக ஒளிர்வோம்.

"உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக".

---

## புனிதரின் பாதையில்

## மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

மே 06

# புனித டோம்னிக் சாவியோ

### துறவி, இளைஞர்களின் பாதுகாவலர் -(கி.பி 1842 - 1857)

வட இத்தாலியில் கி.பி. 1842ல் முரியால்டோ நகரில் தோன்றிய டோம்னிக் புனித டொன்போஸ்கோவின் முதல் மாணவர்களில் ஒருவர். இவரது குடும்பத்தில் இவரின் குழந்தைப்பருவம் முதல் புனிதத்தில் வளரும் சூழ்நிலை எப்பக்கத்தில் திரும்பினாலும் நிலவியது. ஆலயம் சென்றால் அங்கே பங்குத் தந்தை ஜான், இளைஞரின், புனித களங்கமற்ற உள்ளத்தைக் கண்டு அதில் தெய்வீக நெருப்புப் பற்றியெரிந்து கொண்டிருக்க வழிவகைகளைக் காண்பித்தார். அன்னை மரியிடம் கொண்டிருந்த இவரது பக்திய்யை வளர்க்க எங்கும் நல்ல சூழ்நிலை அமைந்திருந்தது. மிக இளவயதிலிருந்தே, காற்றோ, குளிரோ, மழையோ எதையும் பொருட்படுத்தாமல் அதிகாலை 5 மணிக்கே ஆலயம் செல்வதும், தவறாது பூசைக்குதவி செய்வதும் இயல்பாகவே அவருக்கு இருந்த ஆசை. இது அவரது ஆன்மீகத்தின் ஆழத்தை வெளிக் கொணர்ந்தது.

"டோமினிக் என்ற ஓர் இளைஞர் தமது திருமுழுக்கு நாளன்று பெற்றுக்கொண்ட புனிதத்தைப் பழுதின்றிக் காப்பாற்றத் தெரிந்துகொண்டவர். இவர் உண்மையிலேயே ஒரு புனிதர்" என்று குறிப்பிட்டார் திருத்தந்தை 10ஆம் பத்திநாதர். "தூய்மை, பக்தி, ஆன்மவேட்கை இம் மூன்றினின்றும் இவர் அடைந்த ஆற்றல் - இவரது கிறிஸ்தவ வாழ்வுக்கு ஊற்றுக்கண்ணாக அமைந்தது" என்று 11ஆம் பத்திநாதர் குறிப்பிடுகிறார்.



1857ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9ஆம் நாள் இவர் இறக்கும் வேளையில் "ஆகா என்ன இன்பமயமான அற்புதக் காட்சி" என்று விண்ணகக் காட்சி பற்றிப் பரவச வார்த்தைகள் கூறி உயிர்துறந்தார். 1954 ஜுன் 12ஆம் நாள் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் இந்த இளைஞருக்குப் புனிதர் பட்டம் அளித்த போது இவ்வாறு கூறினார். இந்தப் 15 வயது இளைஞர் டோம்னிக் சாவியோவைப் பீடங்களில் ஏற்றலாம் என்று இந்தத் திருச்சடங்கு மூலம் பிரகடனப்படுத்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய இளைஞர்கள் இவரின் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மிகக்குறிப்பாக, தீய சக்திகள் காட்டுத்தீ போல பரவிக் கொண்டிருக்கும் கால கட்டத்தில் புனிதத்தை இளம் உள்ளங்களிலிருந்து கருவறுப்பது மட்டுமன்றி நஞ்சையும் புகுத்திக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், சாவியோவின் புனித வாழ்க்கை நம் இளைஞர்களுக்கு அறைகூவலாக அமையட்டும்".

**சிந்தனைக்கு**

"எனக்குப் பெரிய செயல்களைச் சாதிக்க ஆற்றல் கிடையாது. ஆனால் நான் செய்வது அனைத்தையும் மிகச் சிறியவையே - யானாலும் இறைவனின் மிகப் பெரும் புகழ்ச்சிக்காகவே செய்து முடிப்பேன்" – புனித சாவியோ.

## தடுப்பு முகாம் வேலிகளின் உள்ளிருந்து எம் தமிழ் நெஞ்சங்களின க(ண்ணீர்)வி துளிகள்

# வாழ்வின் வலியில் வல்லமை தந்த இயேசு

உறவுகளை பிரிந்து சொத்து இழந்து,
சொந்த இடத்தை விட்டு,
வாரம் ஓர் இடம் வாழ்வாகிப் போனது
இருந்தவற்றை இழந்து
இருக்க இடமற்ற ஏதிலியாக
உண்ண உணவின்றி பசியோடு
உயிரே மறுகணம் போகுமென்ற
நிலையாகிப்போக
இரணைப் பாலையில் இருக்கும் வேளையில்!
கெத்சமனி தோட்டத்தில் இயேசு அனுபவித்த
கொடிய மரண வேதனையின்
பேறு பலன்களை உணர்ந்து
இயேசுவை வேண்டிக் கொண்டேன்.

திரும்பும் இடமெல்லாம்
துப்பாக்கி ரவைகள் சீறி வரும்
எறிகணைகள் வந்து விழ!
மறுகணம் எங்கே செல்வோம் என
நடை பிணமாய் மக்கள் கூட்டம்
வீதியிலே செல்லும் போது
வந்து வீழ்ந்த எறிகணையில்
செத்துப்போனவர்களை அருகிலே
புதைத்துவிட்டு!
காயப்பட்டவர் உயிரைக் காப்பாற்ற
வைத்தியசாலை எடுத்துச்
செல்லும் போதும்
இயேசு பிரான்
முள்முடி பூண்டு
கல்தூணில்
கொடிய வேதனையை
நெஞ்சில் நிறுத்தி
இயேசுவை
வேண்டிக்கொண்டேன்.



இடப்பெயர்வு வாழ்வில் அவலம்
எங்கும் மக்கள் நெரிசல்!
மாத்தளன் வெட்டையும், கடற்கரையும்
தரப்பாள் கூடாரம் போடுவதற்கு
போதுமானதாக இருந்தது!
கொழுத்தும் வெயிலில் துவண்டு
துடித்தல் ஒரு புறம்
கொத்துக் கொத்தாய் வந்து
விழும் எறிகணையில்
சாவுகளும், அவையங்கள் இழந்தோர்
நிலையும் சாதாரண நிகழ்வாகி விட்டது.
சாவீட்டு துயர் பகிர்வு நிகழ்வும்
மணித் துளியில் மறைந்துவிடும்
அவ் வேளையிலும்
இயேசு பிரான்
பாரச்சிலுவை
தாங்க முடியாமல்
மும்முறை கீழே விழுந்து
அனுபவித்த
கொடிய வேதனையை
உணர்ந்து இயேசுவை
வேண்டிக் கொண்டேன்.



ஒரு நேரம் உலை வைக்க அரிசி இல்லை!
கையில் காசு இருந்தும் உணவில்லை!
உள்ளூர் மனிதாபிமான நிறுவனம்
வழங்கிய ஒரு நேர கஞ்சிக்காக
பொக்கணையில் அதிகாலை வேளை
கஞ்சி வழங்கும் நிலையத்தில்
கஞ்சி வழங்குவதற்கு
வரிசையில் காத்திருந்த சிறுவர்களுக்கு
இடையில் வந்து விழுந்த எறிகணையால்
சிதைந்தார்கள் சிறுவர்கள்.

எங்கும் மரண ஓலம்
எஞ்சிய சிறுவர்களின்
உயிரைக்காக்க வைத்திய சாலை
எடுத்துச் சென்ற போது
யேசு பிரானின் திருக்கரங்களிலும்
கால்களிலும் ஆணிவைத்து
அறையும் பொழுது
அவர் அனுபவித்த தாங்முடியாத
வேதனையின் பேறுபலன்களை
உணர்ந்து இயேசுவை
வேண்டிக்கொண்டேன்.

சாவுகள் மலிந்து விட்ட
நாளாகிப் போனதால்
பதுங்கு குழியே
வாழ்வானது!
வலைஞர் மடத்தில்
பச்சிளம் குழந்தைக்கு
அமுதூட்டிக் கொண்டு
அன்னையிருந்த பதுங்கு குழி மீது
வந்து வீழ்ந்த எறிகணையில்

உயிர் பிரிந்த அன்னையின் நிலையறியாது
குழந்தை தொடர்ந்தும் உயிரற்ற உடலில்
அமுது உறுஞ்சிய குழந்தையை
நேரில் கண்டு – மனம் வெதும்பி!
யேசு பிரான் எங்களுக்காக
அனுபவித்த கசப்பான பாடுகளையும்
கடைசித்துளிவரை சிந்திய
உம் விலையில்லா திரு இரத்தத்தின்
பேறு போற்றை நினைத்து
குழந்தையின் வாழ்வுக்காக
இயேசுவை வேண்டிக் கொண்டேன்.

உலகத்தின் கண்கள் இறுக மூடிக்கொண்டது.
போர் மேகங்கள் சூழ்ந்து கொண்டது!
மனித நேயம் மௌனமாகிப் போனது!
இரண்டரை கிலோ மீற்றர் பரப்புக்குள்
இரண்டரை இலட்சம் மக்கள்
இருப்பதற்கு இடமில்லை
நிற்பதற்கும் போதாது
முள்ளி வாய்க்கால்
போர்ப் பொறிக்குள் இருந்தது!
மக்கள் வெளியேறத் தொடங்கினர்
நாங்கள் சுமந்து வந்த
வேதனைகள், துயரங்கள், துன்பங்கள்
வலிகளுக்கு.......
முள்ளி வாய்க்கால் மனித பேரவலம்
என்ற நாகரீக வார்த்தைக்குள்
உலகம் எம்மை அடக்கிக் கொண்டது!
உண்மைக்கு சாட்சியங்களாய்
இறைவார்த்தைகளோடு
காத்து வழி நடத்திய
அருட்பணியாளர்களும்
மக்களுடன் மக்களாக துன்பியல்
வாழ்வை தாமும் சுமந்தனர்
இயேசு பிரான்
சிலுவையில் தொங்கும் பொழுது
கடைசிக்
கணப்பொழுதில்
உதிர்த்த
உன்னதமான வார்த்தை
"என்தேவனே என் தேவனே
ஏன் என்னை கைவிட்டீர்"
என்ற வல்லமையுள்ள வார்த்தையை
வேண்டிக் கொண்டேன்.



செ. தணிகைக் குயில்

# கூண்டுக் குயில் கூவுது

அமிழ்கின்றோம் துயரினிலே
ஐயனே இரங்காயோ?
ஆடு, மாடுகள், விலங்குகள் அனைத்தும்
அடையும் பட்டியில் இரவில் மட்டுமே!
கூடு கட்டிடும் குருவிகள் பகலிலே
தேடும் இரைக்கென வெளியிலே திரியுமே!

நாடு நாசமாய் ஆனதன் பின்னாலே
கேடு வந்து வீடுபோனது யாவுமழிந்து
பாடுபட்ட எம் பயன்கள் வீண் ஆசை
காடு மேடு இல்லாமல் அலைந்து
திரிந்தோமே அகதிகளாய்

வாரும் என்றவர் அழைப்புக் கிணங்கவே
சேரும் கூட்டத் தோடிணைந்துமே வந்தோமே
நேரும் அவலங்கள் சொல்லவே பயமையா
பாரும் எம் நிலை இவ்விதமானதே!

நம்பி வந்த நாம் நம்பிக்கை இழந்திட்டோம்
கம்பி வேலிக்குள் கை கட்டி நிற்கின்றோம்
தம்பி ரோட்டிலே கைகட்டி நிற்கின்றான்
தும்பியா நாங்கள் பறந்து போவதற்கு

மாற்று உடைகள் தான் கொண்டு வந்தானோ?
நேற்று செய்தியை கேட்டு வந்தானோ?
வேற்று நாட்டிலோ இருந்து வந்தோம் நாம்?
தேற்றுவாரின்றி நாம் தேம்புகின்றோமே

பங்குனி வெய்யிலென்றால்
சொல்லவும் வேண்டுமோ?
எங்கனும் வியர்வையே வியர்த்துக் கொட்டுது
தங்கவே அமைத்திட்ட
தரைப்பாய்க் கொட்டிலில்
எங்களின் பிள்ளைகள்
பெரும் பாடுபடுகின்றனர்

அமுதினும் இனிய என்றுமே அறிஞர்கள்
தமிழினைப் போற்றினார்
அக்காலம் தொட்டேதான்
உமிழ்கின்றார், உதைக்கின்றார்
தமிழனா நீ என்று
அமிழ்கின்றோம் துயரினிலே
ஐயனே இரங்காயோ!

வே. பிரதாப்
பெரிய கோமரசன் குளம், வவுனியா.

# தூரிகை ஆகமாட்டேன்

தாலி கட்டி நீ எனக்கு
வேலியாக இருந்தவனே
பாவி சுட்ட சன்னத்திலே என்னை
பாவியாக்கி சென்றுவிட்டாய்

தொடர் கதையாம் இடப்பெயர்வு
இரவுபகல் நடைப்பயணம்
பொழியும் மழை எறிகணைக்குள்ளும் என்
உடலிலொரு கீறுமின்றி
பத்திரமாய் என்னைப் பாதுகாத்தாய்

ஒரு நாள் ஒரு இடத்தில்
ஒழுங்காய் இருந்ததில்லை
அன்றும் துயர் சுமந்து இடம்பெயர்ந்து
களைப்போடு இருந்தவேளை

நீ எனக்காக பங்கர் வெட்டி
பாடுபட்ட வேளையிலே
பாய்ந்து வந்த சன்னம் அய்யோ
பறித்தது என்னுயிரை
துடித்தது உன்னுயிரே

நீ அகழ்ந்த அதே குழியில்
உன்னைப் புதைத்துவிட்டு
நடைப் பிணமாய் நடைப் பயணம்
நடந்தேன் ஊரோடே

முட்கம்பி வேலி சூழ் என்னை
விதவை என்று பிறரும் கூற
தனிமரமாய் நான் நின்ற போதே
பல துன்பம் வருகுதய்யா

வேலி இல்லை என்றதுமே
மிருகம் மேய நினைக்குதய்யா
கேலியாய் பார்த்துப் பார்த்து
கெக்கட்டம் அடிக்குதய்யா

நீ தொட்ட மேனி இது – உன்
வாசம் விட்டு போகாது
உந்தனுக்கு மோசம் செய்து
இந்த உயிர் வாழாது



கருகி நான் போனாலும்
மிருகம் மேய விடமாட்டேன்
உந்தனது பாரியை நான்
பிறர் கீற தூரிகை ஆகமாட்டேன்

வே. கண்ணன் - மல்லாவி

# கோலமிடமுடியா முற்றம்



இந்த முற்றம்தான்
எறிகணையில் இறந்துபோன
என் அப்பாவை அவசரமாக
அடக்கம் செய்த முற்றம்

சுடுகாடாய் பயன்படுத்திய முற்றத்தில்
சூரியப் பொங்கலை எப்படி இடுவேன்

குருதியது கோலங்களை
இட்டுவிட்ட முற்றத்தில்
மாக்கோலம் இட்டிட மனசு வருமா?

நெல்மணி விதைத்திட
கலப்பைகொண்டு உழும்போதிலே
இடப்பெயர்வு காலத்தில் இறந்தபோது
புதைக்கப்பட்டவர்களின்
எலும்புகளன்றோ கிடைக்கிறது

கடவுளை நினைத்தபடி
கண்மூடிக் கொண்டாலும்
கனவிலும் கேட்கிறதே அதே கதறல் ஒலிகள்

பயன்படுத்திய பதுங்கு குழிகளை
மூடித்தான் விட்டாலும்
பட்டாசு சத்தத்தை கேட்கும் போதும்
என்னை அறியாமலே விழுந்து படுக்கிறேனே

மறந்துவிட வேண்டும்
அந்தப் பொழுதுகளை
இப்படி எத்தனைமுறை என் மனசு
உறுதி எடுத்தபோதும்
என் உறுதியை தோற்கடிக்கச் செய்கின்றன
கொடூர நினைவுகள்

யோ. புரட்சி

# விடிவிற்காய்

காலமென்னும் சுழல் சக்கரம்
எம்மைக் கண்ணீரில் ஆழ்த்திய போது
கரை ஒதுங்கும் படகுபோல்
எம் பயணம் தொடர்ந்த வேளை
இடை நடுவே நேர்ந்த துன்பம்
என் எதிர்காலம் பாழாய்ப் போக
உறவுகளை விட்டுப்பிரிந்து
தனிமரமாய் வாழ நேர்ந்தது
உறவுகளின் பாச நெருடல்
என்னைப் பரிதவிக்க வைத்தபோது
என் மனதை திடமாக்கினேன்
என்னோடும் பல உறவுகள்
இனம் புரியாத மனிதர்களாய்
வாழ்வதைக் காண்கின்றேன்
பள்ளி பயிலும் இளைஞர்கள் தொட்டு
வயது முதிர்ந்த பெரியோர் வரை
என்னுடன் வாழும் உறவுகள்
பல்வேறுபட்ட மனிதர்கள்
ஒன்றாக வாழ்ந்திடும் சூழ்நிலை
உருவாகிப் போனதே என் வாழ்வு
என்பதை எண்ணிப் பார்க்கிறேன்
என் புலனுக்கு வேலை கொடுக்கிறேன்
உள் மனது துடித்துப் போகுது
உணர்வுகள் தென்பூட்டுது
ஒன்று பட்ட இனம் என்பதால்
ஒற்றுமை கடைப்பிடித்தேன்
உறவுகள் போல் பாசம் வைத்தேன்
நட்புறவை வளர்த்துக் கொண்டேன்
இவ்வாறு பொழுதுகள் கழிகின்றன
என் மனம் ஏனோ தடுமாறுது
உள்மனதில் கேள்விகள் எழுகின்றது
ஏனிந்த வாழ்வு உனக்கு வந்ததென்று
ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறாயா....?
தென்றலாய் வீசிய உந்தன் வாழ்வில்
ஏனிந்த சோகம் வந்ததென்று
ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறாயா...?
என் வாழ்வில் விதிவந்து விளையாடுது
என் எண்ணங்கள் மதியோடு வாதாடுது
இதில் யார் வெல்லப் போவதென்று
தெரியவில்லை என் விடுதலைக்கு நாள்
வருமோ புரியவில்லை

எஸ். டன்ஸ்ரன் (ஜான்)
முல்லைத்தீவு

# இயேசுவே

இயேசுவே
சிலுவையில் அறைந்து
குருதி சிந்திடும் உமது
சுரூபத்தைப் பார்த்தே
நான் அழுததுண்டு
அன்று



போரினாலே கொல்லப்பட்டு
புதைகுழியில் மூடப்பட்டு
எஞ்சியவர் சுமக்கும்
துன்பம் கண்டு
அழுததுண்டோ நீரும்
இன்று

வே. கண்ணன் - மல்லாவி

# குருத்துவம் ஒரு வரலாற்றுப் பார்வை

தொகுப்பு அருட்பணி. நெவின்ஸ் யோகராச.

சென்ற மாத தொடர்ச்சி .............

## மரபுகள் மாறுகின்றன.

புதிய ஏற்பாட்டுக் காலத்திற்குப் பின் அதாவது 2ஆம் நூற்றாண்டில் குருத்துவம் பற்றிய பார்வையில் மாற்றங்கள் சில மெல்லமெல்ல அரும்பத்தொடங்கின. முதற்கண் ஆயர்கள், மூப்பர்கள் ஆகியோரின் பணி பற்றிய தெளிவின்மை நீங்கி இரண்டும் வெவ்வேறு பணிகளாக கருதப்பட்டன. ஆயர்கள், மூப்பர்கள், திருத்தொண்டர்கள் ஆகிய மூவகை திருப்பணியாளர்களுள் ஆயர் முதன்மை இடம்பெற்று கிறிஸ்தவ சமூகத்தின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றார். அவரது தலைமையின் கீழ் மூப்பர்களும், திருத்தொண்டர்களும் பணியாற்றும் நிலை திருச்சபையில் உருவானது. எடுத்துக்காட்டாக 2ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் ஆயர்கள், மூப்பர்கள், திருத்தொண்டர்கள் ஆகிய மூவகைப் பணியாளர் பற்றி குறிப்பிட்டுள்ளார். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் திருச்சபையின் பணிகளில் பொதுநிலையினரின் ஈடுபாடும் பங்கேற்பும் உச்ச நிலையில் இருந்தன. 2ம் நூற்றாண்டிலும் கூட போதகர்கள், இறைவாக்கினர்கள் போன்ற பணியாளர்கள் பொதுநிலையினராகவே இருந்து வந்தனர். இருப்பினும் கிறிஸ்தவ சமூகங்களில் படிநிலை அமைப்புகள் வேரூன்றத் தொடங்கியதால் பொதுநிலையினர் திருச்சபையின் மைய நீரோட்டத்தில் இருந்து ஓரங்கட்டப்படும் படலம் படிப்படியாக அரங்கேறத்தொடங்கியது.

## திருச்சபைத் தந்தையர்களின் காலம் (கி.பி. 3 – 5 நூற்றாண்டுகள்)

கிறிஸ்தவ சமயம் முதலில் கொரிந்து, எபேசு, கலாத்தியா, அந்தியோக்கு, தெசலோனிக்கா, உரோமை போன்ற பெரு நகரங்களில் பரவியது. ஒரு நகரத்தில் உள்ள இறைமக்கள் ஒரே சமூகமாகவோ அல்லது எண்ணிக்கைக்குக்கும் தொகைக்கும் ஏற்ப பல சமூகங்களவோ வாழ்ந்துவந்தனர். இருப்பினும் திருப்பணியாளர்கள் அந்தந்த சமூகங்களில் தங்கிப் பணியாற்றவில்லை. அவர்கள் ஒரு குழுவாகவே வாழ்ந்தனர்,செயல்பட்டனர். திருப்பணியாளர்களின் குழுவுக்குத் தலைவராக திகழ்ந்தவர் ஆயர்.ஆயரின் உடன் உழைப்பாளர்களாக மட்டுமன்றி , அவரது பிரதிநிதிகளாகவே மூப்பர்கள் மக்களிடையே பணியாற்றினர். வழிபாடுகளைக்கூட அவர் சார்பாகவே நிறைவேற்றினர். ஆனால் 4ம் நூற்றாண்டிலிருந்து கிராமப்புரங்களில் கிறிஸ்தவம் வேகமாக பரவத்தொடங்கியது. எனவே மூப்பர்கள் கிராமம்தோறும் தொடர்ந்து சென்று பணியாற்றுவது சிரமமாக இருந்தபடியினால் இவர்கள் அக்கிராமங்களிலே தங்கி பணியாற்றும் நிலை ஏற்பட்டது. இக்கிராமங்களை நிர்வகிக்கும் பொறுப்பும் மூப்பர்களிடம் கொடுக்கப்பட்டது.

## ஆயருக்கு முக்கியத்துவம்

தலத்திருச்சபையில் ஆயரின் முதன்மையும் முக்கியத்துவமும் பெருகியதற்கும் அவரது அதிகாரம் நிலைநாட்டப்பட்டதற்கும் முக்கிய காரணம் இருந்ததை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். 3ம் நூற்றாண்டு முதல் தப்பறைக்கொள்கைகளும் தவறான இறையியல் கருத்துக்களும் பரவி மக்களிடையே பல குழப்பங்களும் ஐயங்களும் எழுந்தன. இந்நிலையில் ஆயர்கள் இறை நம்பிக்கையின் காவலர்களாகவும் திருச்சபையை ஒற்றுமைப்படுத்தும் பணியாளர்களாகவும் தீவிரமாக செயற்பட்டனர். இப்பிண்ணனியில் புனித சிப்பிரியன் திருச்சபையில் ஆயர்களின் அதிகாரத்தைப்பற்றி குறிப்பிடும்போது , திருத்தூதர்கள் வழியாக பேசிய கிறிஸ்து அவர்களின் வழிவருபவர்களான ஆயர்களின் வழியாகவும் பேசுகிறார் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். இவ்வாறு மூப்பர்கள், திருத்தொண்டர்கள் ஆகிய பணியாளர்கள் பின்னுக்கு தள்ளப்பட்டு ஆயர்கள் மட்டும் திருத்தூதர்களின் வழிவருபவர்கள் என்ற கண்ணோட்டம் திருச்சபையில் ஆழமாக வேரூன்றியது.

## குருக்களாகும் மூப்பர்கள்

திருச்சபைத் தந்தையர்களின் காலத்தில் ஏற்பட்ட ஒரு மிகப்பெரிய மாற்றம் மூப்பர்கள் குருக்கள் என அழைக்கப்பட்டதாகும். 2 ஆம் நூற்றாண்டிலேயே திருத்தந்தை கிளமெண்ட் தமது மடலில் கொரிந்து நகர மூப்பர்களை குருக்கள் எனக் குறிப்பிட்டிருந்தாலும் இக்கால கட்டத்தில்தான் குரு – குருத்துவம் என்ற சிந்தனையும் சொல்லாட்சியும் திருச்சபையில் பரவத்தொடங்கியது. நற்கருணை பற்றிய இறையியல் புரிதலும் திருப்பணியாளர்களின் பணிகள் பற்றிய பார்வையில் நிகழ்ந்த மாற்றமுமே இதற்கு காரணம் எனலாம். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அன்புறவு விருந்தாக இல்லங்களில் கொண்டாடப்பட்ட நற்கருணை கி.பி. 313 ஆம் ஆண்டில் உரோமைப் பேரரசர் கொன்ஸ்சாந்தின கிறிஸ்தவத்தை அதிகார பூர்வ சமயமாக அறிவித்தபின் திருச்சபைக்கு சிறப்பு சலுகைகளையும் உரிமைகளையும் நிலபுலன்களையும் கிடைக்கச்செய்தான். இவ்வாறு சுதந்திரக் காற்றை சுவாசித்த திருச்சபையில் மெல்ல மெல்ல ஆடம்பரமும் அதிகாரப்போக்கும் தலைதூக்கத்தொடங்கியது. இல்லங்களில் தோழமைச்சூழமைவில் பகிரப்பட்ட நற்கருணை புதிதாக எழுப்பப்பட்ட ஆலயங்களில் ஆடம்பரமாக கொண்டாடப்பட்டது. நற்கருணை பற்றிய இறையியல் பார்வையும் படிப்படியாக மாறத்தொடங்கியது. அது பழைய ஏற்பாட்டு பலிகளோடு ஒப்பிடப்பட்டு பலி உணவாகவும் கிறிஸ்து கல்வாரியில் நிறைவேற்றிய பலியின் உணவாகவும் புரிந்துகொள்ளப்பட்டது. நற்கருணை பலியாக மாறியதால் திருப்பணியாளர்கள் பலி நிறைவேற்றுபவர்களாகவும், மெல்கிசதேக்கின் முறைப்படி என்றென்றும் குருவாக விளங்கும் (எபி 7:17) கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கேற்பவர்களாகவும் போற்றப்பட்டனர். இவ்வாறு மக்களோடு இணைந்து மக்களை சமூகமாக உருவாக்கும் திருப்பணி இவ்வாறு சடங்கு குருத்துவமாக மாறியது.

## மணத்துறவு தேவை

கி.பி 4ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை ஆயர்களுக்கோ அல்லது பிற பணியாளர்களுக்கோ தனிப்பட்ட திருஉடை இருந்ததில்லை. முதலில் ஆயர்கள் மாத்திரம் நற்கருணைக்கொண்டாட்டத்தின்போது சிறப்பு உடை அணிந்திருந்தனர். 5ஆம் நூற்றாண்டின் இடையில் திருத்தந்தை செலஸ்டின் ஆயர்கள் சிலருக்கு எழுதிய மடலில், ‘ஆயர்களாகிய நீங்கள் சாதாரண கிறிஸ்தவர்களிடமிருந்து உங்கள் வாழ்வினாலும் போதனையாலும் பிரித்துக்காட்ட வேண்டுமே தவிர உங்கள் உடைகளால் அல்ல’ என்று எழுதுகிறார். பின்னர் 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆயர்களும் குருக்களும் வழிபாட்டில் மட்டுமல்ல வெளி - யிடங்களிலும் கூட நீண்ட அங்கிகளை அணியத்தொடங்கினர்.

ஆடையில் மாத்திரமல்ல திருப்பணியாளர்களின் வாழ்க்கை முறையிலும் மாற்றம் ஏற்படத்தொடங்கியது. தொடக்ககாலத்தில் எல்லா திருப்பணியாளர்களும் திருமணமானவர்களாகவே இருந்தனர். 2 ஆம் 3ஆம் நூற்றாண்டுகளில் கூடத் தங்கள் குடும்பங்களையும் பிள்ளைகளையும் ஒழுக்கத்திலும் பண்பாட்டிலும் வளர்த்த பெரியவர்களே திருப்பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். காலப்போக்கில் திருப்பணியாளர்கள் பழைய ஏற்பாட்டுக் குருக்களைப்போல் வழிபாட்டு - க்காலங்களில் உடல் உறவு கொள்ளாமல் தூய்மையாக இருத்தல் அவசியம் என்ற கருத்தை வலியுறுத்தினர். பின்னர் 4ஆம் நூற்றாண்டில் ஆன்சரா, நியோ செசரியா ஆகிய இடங்களில் நடைபெற்ற ஆயர் பேரவைகளிலும் (கீழைத்திருச்சபை), எல்விரா, ஆர்லஸ் ஆகிய இடங்களிலும் நடைபெற்ற ஆயர் பேரவைகளிலும (மேலைத்திருச்சபை) மணத்துறவு சட்டபூர்வமாக்கப்பட்டது. வளரும்....

---

4ம் பக்க தொடர்ச்சி .................

## இயேசுவுக்கு சான்று பகரும்................

மேலிருந்து விடுக்கும் அழைப்பே அப்பரிசாகும். எனும் புனித பவுல் பிலிப்பிய மக்களுக்கு கூறிய வார்த்தையை இன்று (பிலி 3:12:14) வாழ்வாக்க பணியாளர் முயல வேண்டும்.

பன்னிரண்டு சீடரையும் பக்கத்திலே நிற்கவைத்து
தன்னறிவை அள்ளிக் கொடுத்தார் - உடன்
இன்னவழி பேய்விரட்ட இன்னவகை நோய்தவிர்க்க
என்பதனை சொல்லி முடித்தார்!

சக்தியை பகிர்ந்து கொண்ட உத்தமர்க்கு மேலும் சில
தத்துவங்கள் அள்ளிக் கொடுத்தார் - நீங்கள்
பெற்றுக்கொண்ட செல்வமிதைப் பெற்றது போல்
லாபமின்றி மற்றவர்க்குத் தாருங்கள் என்றார்!

“காசுபணம் தங்கநகை கையடக்கப் பெட்டி ஏதும்
தேவையில்லை உங்களுக்” கென்றார் - “உங்கள்
சேவைதரும் ஊதியத்தில் வாழ்வதற்கு சாப்பிடுங்கள்
வேறுவழி வேதனை” என்றார்!

“எவ்விடத்தில் உங்கள் மொழி ஏற்கவில்லையோ அதனை
அவ்விடத்தில் விட்டுவிடுங்கள் - நீங்கள்
செல்லிடத்தில் ஒட்டிவந்த சின்னஞ்சிறு தூசிகளும்
தேவை இல்லை தட்டிவிடுங்கள்! (யேசு காவியம்)

நித்திய குருவாகிய இறைவா! உமது பணியை நிறைவேற்றவும் உமது வழியில் மக்களை வழிநடத்தவும் எம் குருக்களை நீர் தாமே வழிநடத்துவீராக! குருத்துவத்தில் இணைந்த இவர்கள் வாழ்வு அனைத்து மக்களுக்கும் முன் மாதிரியாக அமைவதாக! உமது பார்வையில் இருந்து இவர்கள் ஒரு போதும் விலகாதிருக்கும் பொருட்டு உமது கரங்களில் அவர்களைத் தாங்கிக் கொள்ளும்.

---

# உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி – 82

எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து நாம் இப்போது பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திற்குள் நுழைகின்றோம். இத்திருமுகம் நான்கு அதிகாரங்களை மட்டுமே கொண்டுள்ளது. இந் நான்கு அதிகாரங்களிலுமிருந்து கேள்விகள் தொகுக்கப்படுகின்றன.

அதற்கு முன்னதாக பிலிப்பியின் பின்னணி பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளலாம். மசிதோனியா நாட்டின் நகரங்களுள் பிலிப்பியும் ஒன்று, நெயாப்பொலி, அப்போலோனியா, தெசலோனிக்கா, பெரேயா என்ற நகரங்கள் பிலிப்பிக்கு கிழக்கிலும் தென் மேற்கிலும் அமைந்திருக்கும் துறைமுக நகரங்களாக இருக்கின்றன. பிலிப்பி கடலோரத்தில் இருந்து சுமார் 50கி.மீற்றர் வடக்கே அமைந்துள்ளது. மேலும் இந்நகரங்கள் ஐந்தும் கொத்தனி அமைப்பைக் கொண்டுள்ளதால் இவற்றிற்கிடையேயான வர்த்தகமும் உறவுகளும் பண்பாடு கலாசாரத் தொடர்புகளும் மிக நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. பிலிப்பியில் வாழ்ந்த மக்கள்தான் பிலிப்பியர் என அழைக்கப்பட்டனர். இவர்களைப் புனித பவுல் தனது இரண்டாம் மூன்றாம் தூதுரைப் பயணங்களில் சந்திக்கின்றார். இரண்டாம் பயணத்தில் வந்தபோது அங்கு அதிகமானோரை மனம் மாற்றி கிறீஸ்துவின் நற்செய்தி வாழ்வுக்கு அழைத்து வந்திருக்கின்றார்.

பிலிப்பியருக்கும் பவுலடியாருக்கும் இடையில் இருந்த உறவு மிக நெருக்கமாக இருந்திருக்கின்றது. அதனால் புனித பவுல் சிறைப்பட்டதை அறிந்து எப்பப்பிராத்து என்பவரிடம் பணம் கொடுத்தனுப்பி பவுலடியாரைப் பராமரிக்குமாறு கேட்டுக் கொண்டனர். இத்திருமுகத்தை புனித பவுல் எங்கிருந்து எழுதினார்? உரோமைச் சிறையிலிருந்தா அல்லது எபேசிலிருந்தா என்பதில் சில மாறுபட்ட கருத்துக்கள் உண்டு.

**இனி நாம் வினாக்களுக்கு வருவோம்.**

1. என்ன நேர்ந்தாலும் வெட்கமுறாது இன்றும் என்றும் வாழ்விலும் சாவிலும் முழுத்துணிவுடன் யாரைத் தம் உடலால் பெருமைப்படுத்துவேன் எனப் புனித பவுல் கூறுகின்றார்?
2. தான் இறந்தால் கிறீஸ்துவோடு இருப்பதால் தனக்கு ஆதாயமே எனக்குறிப்பிடும் பவுல் எதற்காக வாழ விரும்புவதாகக் குறிப்பிடுகின்றார்?
3. தூய ஆவியினால் தோழமையும் பரிவுள்ளமும் இரக்கமும் கொண்டிருந்தால் எப்படி வாழவேண்டும் எனப் பவுலடியார் பிலிப்பியருக்கு என ஆலோசனை கூறுகின்றார்?
4. கடவுளான கிறீஸ்து தம்மை எந்த அளவுக்குத் தாழ்த்தினார்?
5. தந்தையோடு சேர்ந்து மகன் பணியாற்றுவது போல் புனித பவுல் தன்னோடு சேர்ந்து பணியாற்றுவது யார் எனக் கூறுகின்றார்?
6. தான் எந்த இனத்தைச் சேர்ந்தவர் எந்தக் குலத்தவர் எந்தப் பெற்றோருக்குப் பிறந்தவர் எனக் கூறுகின்றார்?
7. திருச் சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் ஆர்வமிக்க பரிசேயனாக இருந்தும் தான் பெற்ற ஒப்பற்ற செல்வம் யாது எனப்பவுலடியார் கூறுகின்றார்?
8. எதை ஆதாயமாக்கிக் கொள்ளத் தான் பெற்ற எல்லாச் செல்வங்களையும் திறமைகளையும் குப்பை எனக் கருதுகின்றார்?
9. நன்றியோடு கூடிய இறைவேண்டல் மன்றாட்டு வழியாக நமக்குக் கிடைப்பது என்ன?
10. புனித பவுல் இறுதியாக எவற்றை மனதில் இருத்தும் படி கூறுகின்றார்?

---

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 80 இற்கான கேள்விகளுக்கு 14 பேர் விடையளித்திருந்தனர்

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

### *அ. அனுஸ்ரீபன்*

*மத்திய கல்லூரி, ஓமந்தை, நலன்புரிநிலையம்*

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. ம. கீர்த்தி நில்மினி, பு. ச. பெ. தே. பா மன்னார்.
2. அ. மேரிஜஸ்மின், தி.கு. க. ம இறம்பைக்குளம், வவுனியா
3. ஜி. வசந்ததாஜ், இல. 51/100, சாந்திபுரம்,, மன்னார்.
4. B. J. சிந்துஜா எழுத்தூர், மன்னார்.
5. எஸ். காயத்திரி சாந்திபுரம், மன்னார்.
6. செ. மேரி பற்றீசியா, நறுவிலிக்குளம், வங்காலை.
7. ச. கிஷோஷாளினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
8. வி. மேரி றெஜினா, இல.3 கச்சேரிவிடுதி, கற்குழி, வவுனியா.
9. யோ. மேரி இமேக்குலேற்றா பிகிறாடோ, பள்ளிமுனை.
10. யே. றொகாந்தி, தரம் 11A, பிடாரிகுளம், முருங்கன்.

உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி - 80 இற்கான சரியான விடைகளை 11ம் பக்கத்தில் பார்க்கவும்.

# கலை இலக்கியச் சாளரம்

## தட்டுங்கள் திறக்கப்படும்

**ஆதவன் - வயவை**

எல்லோரைப் போலவும் ரகுவும் ஒரு சராசரி இளைஞன் தான். ஆனால் குடிகாரன் என்று பெயரெடுத்துவிட்டான். அவனின் கல்வி படித்த படிப்பு, செய்யும் வேலையில் உள்ள நுண்ணிய திறமைகள், உறவினர்களுடன் கதைக்கும் பாங்கு, அன்பு இரக்கம் இவை அனைத்துமே நல்ல குணங்களாக அடையாளங்களாக ரகுவிடம் காணப்பட்டாலும் இந்த குடிகாரன் என்ற பதமே மேலோங்கி நின்றது.

ரகு ஒரு குடிகாரன் மட்டும் தான். மற்றப்படி அவனில் எந்தக் குற்றமும் யாருமே கூறமுடியாது. ரகு தன்னிலும் விட குணங்குன்றியவர்கள், சண்டை செய்வோர் எல்லாம் மறைமுகமாக தன்னைப் பற்றி குடிகாரன் எனக்கதைப்பதை சகிக்க முடியாமல் புகைந்து கொண்டிருந்தான். அவன் பல முயற்சிகள் மேற்கொண்டும் இந்தக் குடியில் இருந்து விடுபட முடியாமல் திணறிக் கொண்டிருந்தான். சில சமயம் ரகுவிற்கு தன்னிலேயே வெறுப்பு ஏற்படும். குடியில் தவறி விழுந்து விட்டான்.

அன்று ரகு தன் அன்ரி வீட்டில் உணவருந்தி விட்டு சகோதரிகளுடன் பேசிக் கொண்டு அவர்களின் கல்வி தொடர்பான விளங்காத வினாக்களுக்கு விடையளித்துக் கொண்டிருந்தான்.

"ரகு இங்கே ஒருக்கா வா தம்பி" அன்ரி கூப்பிட்டதும் அங்கே போனான் ரகு.

"என்ன அன்ரி வழமையைப் போல ஏதும் சொல்லப் போறீங்களோ?" என்றான் ரகு.

"பின்ன என்ன தம்பி நேற்றும் பூசை முடிஞ்சப்பிறகு பாதரோடை கதைக்கேக்கை அவரே உன்னைப் பற்றிக் கதைத்தார். தனிய வந்து கோயிலுக்க இருந்து நீண்ட நேரமாக மன்றாடுகிறாயாம். பிறகு வெளியில வந்து சிநேகிதரோட சேர்ந்து குடிச்சுத் திரிகிறாயாம் ஏன் தம்பி எல்லாரிடமும் கெட்ட பெயர் கேட்கிறாய்" என்றுரைத்த அன்ரிக்கு.

"நான் என்ன அன்ரி செய்யிறது எப்பிடி மனதைத் திடப்படுத்தினாலும் முடியுதில்லையே" என்றவாறு பதிலுரைத்த ரகு அங்கிருந்து வெளியேற எத்தனித்தான்.

"ரகு நில்... நான் இப்படிச் சொல்லிப் போட்டன் எண்டு வீட்டை வராமல் விட்டிடாத... என்ன?..." என்ற அன்ரியை பார்த்து புன்னகைத்தபடி வெளியேறினான். கள்ளுத் தவறனை, சாராயக்கடை இப்படி மதுபானம் விற்பனை செய்யும் இடத்திற்கோ, எக்காரணம் கொண்டும் அந்த வீதிகளுக்கோ போவதில்லை என்ற முடிவுடன் ரகு திடமாக இருந்தான். சில மாதங்கள் தான் அவனால் தாக்குப்பிடிக்க முடிந்தது. மீண்டும் நண்பர்கள்.. குதூகலம் என்று ஆரம்பித்து விட்டான். எனினும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அருகில் தேவாலயங்களுக்கு தவறாமல் போவான். தன் வேண்டுதல்களைக் கேட்டுக் கேட்டுக் கவலைப்படுவான். பல சந்தர்ப்பங்களில் துக்கம் தாளாமல் தனிமையில் அழுதும் இருக்கிறான். அவன் தன்னையே நொந்து கொள்வான்.

திறக்கும் வரை தட்டுவேன் கிடைக்கும் வரை கேட்பேன் என் வேண்டுதலை ஆண்டவர் நிறைவேற்றுவார் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தான்.

அன்று காலை வீட்டிலிருந்து ரகு வேலைக்கு வழமைபோல புறப்பட ஆயத்தமான போது "தம்பி நேற்று உனது பெரியப்பா வந்து போனவர்" என்றாள் ரகுவின் தாய். "நான் பின்னேரம் கண்டனானம்மா என்னோட கதைக்கயில்லை என்ன சொன்னவர்" என வினவிய ரகுவிடம், "வேற என்ன வழமையைப் போலதான். எங்கட குடும்பத்தில் ஒருத்தரிடமும் இல்லாத பழக்கம் இவனை என்ர தம்பியின்ர பிள்ளையெண்டு சொல்லவே அவமானமாயிருக்காம். ஏன் தம்பி உன்ர சினேகிதர் மாராலை தானே நீ உத்தக் கோலத்தில் திரிகிறாய் உனக்கு எத்தினை முறை எத்தினை விதமா சொல்லிப் போட்டன் அவங்களோட சேராதயெண்டு," கொட்டித் தீர்த்தாள் அவனின் தாய். "அம்மா என்னிலைதான் பிழை, ஏன் நீங்கள் அவங்களைப் பேச வேணும்" என்று நியாயம் பேசிய ரகுவிடம், "உப்படியே சொல்லி என்னை மடக்கிப் போட்டு நீ உன்னுடைய வேலை தானேடா செய்யிறாய். உன்னுடைய தம்பிமார் தங்கச்சியைப் பற்றி யோசிக்கிறாயா? அல்லது உன்னைப்பற்றியெண்டாலும் யோசிக்கிறாயா? கஸ்டப்பட்டு வேலை செய்யிறாய். பிறகு அவ்வளவு காசையும் கொண்டு போய் அழிக்கிறாய். உனக்கு இருபத்தைந்து வயதடா அதெண்டாலும் தெரியுதா? உனக்கு இந்த ஊர்ச்சனங்கள் எல்லாம் நல்ல மாதிரி உன்னைப் பற்றிக் கதைக்க வை பாப்பம்" என்று அம்மா ஏசிக்கொண்டிருந்தார்.

"அம்மா பெரியப்பா எனக்கு கலியாணம் செய்து வைப்பம் திருந்தி விடுவான் எண்டு கதைச்சவராம், அதுசரி வராது இன்னொரு பெண்ணின் வாழ்வை நான் படுகுழிக்கு கொண்டு போக விரும்பவில்லை. அதுக்குக் காலம் கிடக்கு" என்றவாறு ரகு வெளியே போய்விட்டான்.

இரண்டு நாளின் பின் வீட்டிற்கு வந்தான் "அம்மா என்னுடைய வேண்டுதலுக்கும் உங்களின் வேண்டுதலுக்கும் கடவுள் வழி திறந்துவிட்டிருக்கிறார். நான் ஒரு முடிவு எடுத்திட்டன். இதுவரை நான் எடுத்த எந்த முயற்சியும் நிறைவான பலன் தரவில்லை. நான் இப்ப எடுத்திருக்கிற இந்த முயற்சி முழுமையான பலன் தரும் ஆண்டவரால் திறந்து விடப்பட்ட இந்த வழியில் நான் நிறைவாகப் பயணிக்க இறைவனை மன்றாடுங்கள்" என்று நம்பிக்கை அறிக்கை செய்தான் ரகு

"என்ன தம்பி என்னவென்று சொன்னால்த்தானே எனக்கும் விளங்கும்" என்று ஆர்வக் குரலெழுப்பிய அம்மாவிடம், "அம்மா மிகவும் சிரமப்பட்டுத்தான் இந்த முடிவு எடுத்தனான். இந்த முடிவை என்னால் நிறைவேற்ற முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன். வவுனியாவில எனக்கு தெரிந்த ஒரு முதலாளியின் தொழிற்சாலையில் தங்கி நின்று வேலை செய்யப் போறன். அங்கே கண்டவரெல்லாம் வந்து போக முடியாது நல்ல ஒழுக்கமான இடம். மூன்று வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ளேன். நீங்கள் மட்டும் என்னிடம் வந்து போகலாம் அவசியம் ஏற்பட்டால் மட்டும் நான் வீட்டிற்கு வருவேன்" என்று தீர்மானமாய் கூறினான் ரகு.

அம்மா இப்படி ஒரு முடிவை ரகுவிடம் எதிர்பார்க்க வில்லை. "ஏன் தம்பி எங்களையும் வெறுத்தது போல் பேசுகிறாய்" என்று விசும்பிய அம்மாவை பார்த்து, "என்ர அம்மா அப்படி ஒன்றும் இல்லை. இது என் நல் வழிக்கான பாதை" என்று கூறியவாறு ஒரு தொகைப் பணத்தை அம்மாவின் கைகளில் நிறைத்து வைத்தான்.

"அம்மா நாளை காலையில் பயணம்" என்று கூறியவாறு மிக மகிழ்வுடன் தன் சகோதரர்களுடன் இந்த விடயத்தை பகிர்ந்து கொள்ள ரகு சென்று கொண்டிருந்தான்.

காலங்கள் நகர்ந்தன. ஒரு வருடத்தின் பின் இடையிடையே மட்டும் வந்து போன ரகு மூன்று வருடங்களின் பின் திருமணமானான். தற்போது பத்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அந்த ஊர்போற்றும் முன் மாதிரி மனிதனாக தலை நிமிர்ந்து ரகு நிற்கிறான். அவன் எந்தச் சந்தர்ப்பத்திலும் இறைவனைக் கைவிட்டதில்லை. (யாவும் கற்பனையல்ல)



## சாவை வென்ற சத்தியன்

பாவிகள் ஈடேற்றம் அடைய
இப் பாரினில் இன்னல் பட்டீரே!

மாந்தர்கள் மானிலத்தில்
மகிழ்வுடன் வாழ வழிகாட்டினீரே!

தண்மதி போல தரணியெங்கும்
நன்மைகள் பல புரிந்தீரே!

நானிலம் போற்ற நாளெல்லாம்
புதுமைகள் செய்தீரே!

கண்ணீரோடு வாழ்ந்தவருக்கு
கலங்கரை விளக்குப் போல
ஒளி வீசினீரே!

சமுதாய சீர்கேடுகளை அறவே
அடியோடு வெறுத்தீரே!
இயற்கையே அடிபணிய
கட்டளை இட்டீரே!



எழைகள் ஏற்றம் பெற
ஏணியாய் நின்றீரே!
பொய்மை வெறுத்து
வாய்மை உரைத்தீரே!

துஸ்டர்களின் தொல்லைகளை கண்டு
துவண்டுவிடாமல் துணிவுடன் நின்றீரே!

வேதனைகள் பலபட்டு
சாதனைகள் பல புரிந்து
சாவை வென்று
சரித்திரம் படைத்தீரே!

சு.சுஸ்மிதா
மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி

## அனுபவத்தின் பதிவு

நாளுக்கொரு புதுமுக வரவாய்
வாழ்க்கையில் ஆயிரமாயிரம்
உறவுகள்
உறவுகளிடையே எரிகின்ற மனங்கள்
பழகி வந்த முகம்
பாதியிலே மறையும் என்ற
உண்மையற்ற உறவுகள்
இவ்வுலகில் ஏராளம்
நிரந்தரமான
உறவைத் தேடினேன்
நிலையற்ற உலகில்
நிஜமான உறவாய்
நிபந்தனையற்ற அன்போடும்
என் தவறுகளோடும்
என்னை மாறாத அன்போடு
அரவணைக்கும் உறவாக
உணர்ந்தேன் என் அன்பர் யேசுவை



பீ. ஒகஸ்ரீனா இறம்பைக்குளம், வவுனியா

# இயேசு பு(வி)தைக்கப்பட்டது

## வெறும் கல்லறை அல்ல அதுவொரு கருவறை

**வண. அ. சகாயநாதன் ( தி.ச.)**

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அது பலன் கொடுக்காது" (யோவா 12:24). விதைக்கப்படுவது அழிவுக்குரியது, முளைத்து எழுவதோ நிலையானது. ஒவ்வொரு விதையிலும் ஓர் உயிர் உண்டு. அந்த உயிருக்கு வாழ்வு இருக்கிறது. அந்த வாழ்வுக்கு வளர்ச்சி இருக்கிறது. அதற்கும் ஒரு முடிவுண்டு. அந்த முடிவுக்கு தொடர்ச்சியும் இருக்கிறது. மண்ணுக்குள் புதைக்கப்படுகின்ற விதையானது ஒரு வாரம் வரை இந்த உலகம் ஒளி இவற்றிலிருந்து மறைந்து மடிந்தால்தானே புதிய தளிரை தரமுடிகிறது. "நீ விதைக்கும் விதை மடிந்தாலொழிய உயிர் பெறாது. முளைத்த பயிராக நீ அதை விதைக்கவில்லை, மாறாக வெறும் கோதுமை மணியையோ, மற்றெந்த விதையை - யோதான் விதைக்கிறாய். கடவுளே தம் விருப்பப்படி அதற்கு ஓர் உருவைக் கொடுக்கிறார். ஒவ்வொரு விதைக்கும் அதற்குரிய உருவை கொடுக்கிறார்". (1கொரி 15:36-38) மறைந்திருப்பதும் மடிவதற்குத் தயாராயிருப்பதும் புதிய வாழ்வு மலரத் தேவையான நிபந்தனைகளாக இருக்கின்றன.

கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டாடுகின்ற விழாக்களிலெல்லாம் மிகவும் முதன்மையானதும், உன்னத - மானதுமான விழா கிறிஸ்து உயிர்ப்பு விழாவாகும். இது கிறிஸ்தவ வாழ்விற்கு அடித்தளமாகவும் இருக்கின்றது. யேசு என்ற ஒரு மனிதன் இந்த உலகத்தின் தீமைக்கு எதிராக போராடியவர். அடக்கப்பட்ட, உரிமைவாழ்வு இழந்தவர்களின் சார்பாக அநீதி நிறைந்த அரசுக்கு எதிராக குரல் கொடுத்து மக்களின் விடுதலைக்காக முழுமையாக தன்னை தியாகம் செய்யத் துணிந்தார். அதனால் தான் அவர் வதைக்கப்பட்டு சிலுவையில் அடிக்கப்பட்டு மண்ணில் புதைக்கப்பட்டார். அந்த கல்லறை யேசுவை கருவாக மூன்று நாள் தாங்கியது. அவர் மூன்றாம் நாள் வெற்றிவீரனாக உயிர் பெற்று எழுந்தார். ஆகவே அவர் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டார் என்பதை யோவான் நற்செய்தியாளர் தெளிவுபடுத்துகிறார். கல்லறை வெறுமையாக இருந்தாலும் கல்லறை முழுவதும் உயிர்ப்பின் செய்திகள் நிரம்பிவழிந்தன. இயேசுவின் உயிர்ப்பு இறந்தோரின் உயிர்ப்புக்கு அடித்தளமா - கியது. அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது. மதிப்பற்றதாய் விதைக்கப்படுவது மாண்புக்குரியதாய் உயிர்பெற்று எழுகிறது. வலுவற்றதாய் விதைக்கப்படுவது வல்லமையுள்ளதாய் உயிர்பெற்று எழுகிறது.

பு(வி)தைக்கப்பட்ட இயேசு உயிர்த்தது மட்டுமன்று, அவரின் கொள்கைகளும் கோட்பாடுகளும் தினம் தினம் புதுவடிவம் பெறவேண்டும். இயேசுவின் ஓர் உன்னத உலுக்கலாக இல்லாமல் நமது எழுச்சியின் ஓர் உன்னத உலுக்கலாக மாறவேண்டும். விசுவாசவாழ்வு, உரிமை வாழ்வு, அன்பு வாழ்வு, இவற்றை நமதாக்கிக் கொண்டால் இலட்சியவாதி இறப்பதில்லையென இயேசுவின் உயிர்ப்பு எடுத்துக்காட்டுகிறது. காலத்தால் அழியாதவனைக் கல்லறைக்குள் அடக்கிவிட்டாலும் அவரின் சிந்தனைகள் ஓங்கி ஒலித்துகொண்டே இருக்கும். அதனால்தான் இயேசு உயிரோடு இருந்தபோது அப்போஸ்தலர் துணிவோடு இருந்தனர். அவர் இறந்த பின்பு இழப்போடு இருந்தனர். அடக்கம் பண்ணப்பட்ட பின்பு, அடங்கிபோனார்கள். உயிர்த்த பின்பு உயிரை துச்சமாக கொண்டு உண்மை வீரர்களாக சாட்சியம் பகர்ந்தார்கள்.

ஆகவே அதேபோன்று ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்து உயிர்ப்பின் தொடர்ச்சியாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்து உயிர்ப்பின் மேல் கட்டப்பட்டவனாய் இருக்க வேண்டும். எனவே கிறிஸ்து உயிர்ப்பை உண்மையாக்க, முழுமையாக்க, தொடர்ச்சியை உண்டாக்க கடமைப்பட்ட - வனாகிறான். கிறிஸ்தவ வாழ்வு என்பது இருப்பதே போதும் இயங்குவதே போதும் இதுவரை வாழ்வதே போதும் என்று வாழ்வதில்லை மாறாக அர்த்தமுள்ள வாழ்வு யேசுவின் உயிர்ப்பு நமக்கு தந்த அன்பு சமாதானம், ஒற்றுமை, நேர்மை, விடுதலை வாழ்வு இவற்றை அடிப்படையகாக கொண்டு வாழவேண்டும். பாவக்கறைபடிந்த இதயத்தை மூடியுள்ள கல்லறை புரட்டி கல்லான கல்லறையான இதயத்தை திறப்போம். அப்போதுதான் நமக்கு புதுவாழ்வு கிடைக்கும்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு நமக்கு உணர்த்துவது வாழ்வு அர்த்தமுள்ளது, சாவு அதைவிட அர்த்தமுள்ளது என்பதேயாகும். கிறிஸ்தவர்களாகிய நமக்கு இருக்கவேண் - டியது உயிர்ப்பின் விசுவாசம் ஏனென்றால் நாம் உயிர்த்த ஆண்டவரின் மக்கள். இயேசுவின் உயிர்ப்பு இறந்தோரின் உயிர்ப்புக்கு அடித்தளமாகிறது. (1கொரி 15:1-11)

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.95 எசேக்கியேல் 9-16

உங்கள் விடைகளை 15.06.2010க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | | | 03 | | | | 04 | |
| | | | | | ★ | | | 05 | | |
| | | | | 06 | | | | | | |
| 07 | | 08 | | | | ★ | | | | 09 |
| | | 10 | | | | | | | 11 | |
| | | | 12 | | | | ★ | | | |
| | 13 | | | | | ★ | 14 | | | |
| | | | ★ | ★ | | | | 15 | | ★ |
| | | | | | 16 | | | | | |
| 17 | | 18 | | | | | | ★ | ★ | 19 |

### இடமிருந்து வலம்

1. பெருமூச்சு விட்டுப் புலம்பும் மனிதர்களுக்கு நெற்றியில் .......................................... இடு.
6. அவற்றின் முகச்சாயல் கெபார் ஆற்றோரம் நான் கண்ட முகங்களைப் போன்றே ..........................................
8. ஏதாவது வேலை செய்ய அதிலிருந்து ................................ எடுக்கப்படுகிறதா?
10. இதோ ஆறு ஆள்கள் .................................. நோக்கி இருக்கும் மேல் வாயிலின் வழியாக வந்தனர்.
12. நீங்கள் அவர் ............................... நகரெங்கும் சுற்றிவந்து தாக்குங்கள்.
13. .............................. எரிந்து கருகிய அதை எந்த வேலைக்காவது பயன்படுத்த முடியுமா?
16. அவற்றின் முகச்சாயல் கெபார் ............................ நான் கண்ட முகங்களைப் போன்றே தோன்றிற்று.
18. அந்தப் .............................. நான் ஒரு முடிவு கட்டுவேன்.

### மேலிருந்து கீழ்

1. சுழல் சக்கரங்கள் என்று அவை .............................ப் பட்டதை நான் கேட்டேன்.
2. கெருபுகளின் நடுவிலுள்ள நெருப்புத் தணலைக் ................. வாரி நகரின் மீது வீசு.
4. இஸ்ரயேலில் எஞ்சியிருப்போரை முற்றிலும் .......................ப் போகிறீரா?
7. நீ.......................... நாளிலேயே வெறுத்து ஒதுக்கப் பட்டாய்
9. நான் உன்னை நீராட்டி உன் மேலிருந்த இரத்தத்தைக் கழுவித்.............................. உனக்கு எண்ணெய் பூசினேன்.
10. உன்னை வயல் வெளியில்................................ பயிர் போல் உருவாக்கினேன்.
11. சர்ப்பரத்துக்குள் .......................... இருப்பது போல் தோன்றியது.
13. அவர்கள் நெருப்பிலிருந்து தப்பிச் சென்றாலும்........................ அவர்களைச் சுட்டெரிக்கும்.

### வலமிருந்து இடம்

2. ஆண்டவர் நாட்டைக் ..............................விட்டார்
3. அப்போது ஆண்டவரது ஆவி என்மீது .......................... (இறுதி எழுத்து முதலாவது எழுத்துக்குப் பின்னே உள்ளது)
4. அப்போது நானே ஆண்டவர் என்பதை ..................... கொள்வீர்கள்.
5. சுவரில் துளையிட்டு அதன் ..............................அவற்றை வெளிக்கொணர்வாய் (1ம், 2ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
9. ஏனெனில் அவர்கள் நம்பிக்கைத்.............................. செய்துள்ளனர் (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
11. என் .....................த் தன்மை உன்னை விட்டு அகன்றுவிடும்.
15. ........................ ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது.
16. .................. அவர்களுள் சிலரை வாளுக்கும் பஞ்சத்துக்கும் கொள்ளை நோய்க்கும் இரையாக்காமல் விட்டு வைப்பேன்

### கீழிருந்து மேல்

6. அவை நான்கும் ஒரேவித.......................... கொண்டிருந்தன
8. என் மக்களிடையே எனக்குக் ....................... விளைவிக்கிறீர்கள் (குழம்பியுள்ளது)
10. இஸ்ரயேல் வீட்டாரின் இதயங்கள் அனைத்தையும் நான் என் ........................க் கொள்வேன்.
13. இதோ அது .......................... இரையாகப் போடப்படுகிறது.
15. பின்னர் நான் கண்ட ..............என்னை விட்டு அகன்றது.
17. இரத்தத்தில் .................உன்னை நோக்கி "வாழ்ந்திடு" என்றேன்.
19. என் ......................நெறிகளை நீங்கள் கடைப்பிடிக்கவில்லை.

# மொழி என்பது ஒரு மனிதனின் அடையாளம்: உலக நாகரீகத்தின் அளவுகோலாக மதிக்கப்படுவது மொழியாகும்

### -கலை இலக்கிய விழாவில் தமிழ் நேசன் அடிகளார்-

மொழி என்பது ஒரு மனிதனின் அடையாளம். உலக நாகரீகத்தின் அளவுகோலாக மதிக்கப்படுவது மொழியாகும். இந்த மொழியை வளர்க்க ஒவ்வொரு இனத்தவரும் பாடுபடுகின்றனர். 15ம் லூயி என்ற பேரரசன் தன் பிரஞ்சு மொழியைப் பாதுகாக்க 1525ம் ஆண்டு பிரஞ்சுக் கலைக்கழகத்தை உருவாக்கினான். ஆனால் வளமாக வாழ்ந்த நமது பண்டைத் தமிழ் மக்கள் தம் தாய்மொழியாம் தமிழ் மொழியை வளர்ப்பதற்காக 2000 ஆண்டுகளுக்கு முன்பே பல சங்கங்களை நிறுவி தமிழை வளர்த்துள்ளனர். அதனால்தான் 'சங்கம் வளர்த்த தமிழ்' என்ற அடை மொழி தமிழுக்கு வந்தது என மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார். கடந்த 17ம் திகதி சனிக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சித்திரைப் புத்தாண்டையொட்டிய கலை இலக்கிய விழாவில் தலைமை உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் அவர் கூறுகையில்: இன்றும் தமிழை வளர்க்க தமிழ்பேசும் மக்கள் தாம் வாழும் இடங்களில் எல்லாம் பல அமைப்புக்கள், கழகங்கள், சங்கங்களை உருவாக்கி தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றனர். "சொல்லில் உயர்வு தமிழ் சொல்லோ" என்றும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்"? என்றும் தமிழின் உயர்வை சிலாகித்துச் சொன்னார் மகாகவி பாரதி. தமிழுக்கு அமுதென்று பேர்! – அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!" என்றும் "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு! என்றும் மகிழ்ச்சிக் கூத்தாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

நமது தாய் மொழியாம் தமிழ் மொழி இன்று செம்மொழி என்ற உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுள்ளது. உலக மொழிகளில் முதன் முதலில் கிரேக்க மொழியும் இலத்தீன் மொழியும்தான் செம்மொழிகள் என்று கருதப்பட்டன. பின்னர் வடமொழியையும் செம்மொழியாக ஏற்றுக்கொண்டார்கள். இந்த மூன்று மொழிகளோடு அண்மை ஆண்டுகளில்தான் தமிழ் மொழியையும் செம்மொழியாக உலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் 'உலகத் தழிழராய்ச்சி மன்றத்தை' நிறுவி அதனூடாக உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை பல்வேறு இடங்களில் நடத்தினார். இவ்வாண்டு யூன் மாதம் தமிழ்நாட்டின் கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற இருக்கின்றது. இது உலகெங்கும் வாழும் தமிழ் அறிஞர்களின் மாபெரும் ஒன்றுகூடலாக அமையும்.

மன்னார் மாவட்டத்தின் கலை இலக்கியங்களைப் பேணவும், வளர்க்கவும் கலைஞர்கள், மற்றும் இலக்கியவாதிகளை ஒன்றிணைத்து ஊக்கப்படுத்தவும், அவர்களின் ஆற்றல் திறமைகளை வெளிக்கொணரவும் ஒரு உறுதியான, செயற்திறன் வாய்த்துள்ளது. எனவே சாதி, இன, மத, அரசியல் பேதமற்ற முறையில் மன்னார் மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களையும், அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதான வலுவான ஒரு கலை இலக்கிய அமைப்பாக "மன்னார் தமிழ்ச் சங்கம்' என்ற பெயரில் இந்த கலை இலக்கிய அமைப்பை ஏற்படுத்தி உள்ளோம். இன்றைய எமது கலை இலக்கிய விழா எமது நோக்கத்தின் ஒரு சிறு பகுதியாக அமைகின்றது என தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

## உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி - 80 இற்கான சரியான விடைகள்

1. கிறிஸ்து வழியாக
2. நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் அவர் திருமுன் விளங்கும்படி
3. கால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற திட்டம்
4. நாம் மீட்படைந்து உரிமைப்பேறு பெறுவோம் என்பதை
5. ஆண்டவராகிய இயேசுவின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை, இறைமக்கள் அனைவரிடமும் அவர்கள் செலுத்தும் அன்பு என்பவற்றிற்காக
6. தூய ஆவி
7. ஊனியல்பின் தீய நாட்டங்களின் படி வாழ்ந்து, உடலும் மனமும் விரும்பியவாறு செயல்பட்டு
8. நாம் கிறிஸ்துவோடு உயிர்த்தெழவும் விண்ணுலகில் அவரோடு அமரவும்
9. நற்செயல்கள் புரிவதற்கு
10. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமும் சிலுவையின் வழியாகவும்

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 93ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

*முதலாம் பரிசு:*
**செபமாலை ஜெனிஸ்ரா,**
தேவன்பிட்டி,
வெள்ளாங்குளம்.

*இரண்டாம் பரிசு:*
க. றகுநாதன்,
மன்/அடம்பன்
ம.ம.வி.

*மூன்றாம் பரிசு:*
க. றெஜினோல்ட்,
இல.54, கற்குளம்-2,
சிதம்பரபுரம், வவுனியா

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 72 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 93ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. மரியசீலன் மரியதீபன், தேவன்பிட்டி, வெள்ளாங்குளம்.
2. ஜெ. துஷானி லெம்பேட், 5ம் வட்டாரம், வங்காலை.
3. சவிரிமுத்து திரேசம்மா, சில்லாலை, பண்டத்தரிப்பு.
4. எம். ஹெல்சன், டீ.பி.எம். மாறம்பக்குளம், வவுனியா.
5. ம. ஜொய்னா இல. 03, வைத்தியசாலைவீதி, மன்னார்.
6. சி. வின்சன் யோட்ஸ், கொன்னையன்குடியிருப்பு, தாராபுரம்.
7. க. மடோனா, தி. கு. க. ம., இறம்பைக்குளம், வவுனியா.
8. ஜெ. அருள் துஷ்யந்தன், காத்தாங்குளம், வட்டக்கண்டல்.
9. த. பர்வின் நிலாந்தி, 65 பூங்கா வீதி, வவுனியா.
10. ஜெ.எம்.ஜெயந்தன், நறுவிலிக்குளம், வங்காலை.
11. எம்.பி.ஆர். கிறிஸ்ரோபர், 18,கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
12. செ. ஆனந்டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வ. வங்காலை.
13. அ. அன்ரனிக்கா றதி, மன்/கருங்கண்டல். ம.வி. தரம் 11
14. என் டயானா, பறப்பாங்கண்டல், உயிலங்குளம், மன்னார்.
15. அ.மேரி ஜஸ்மின், தி.கு.க.ம. இறம்பைக்குளம், வவுனியா.
16. அ. எடல் ஜெரொக்சி துரம், 8ம் வட்டாரம், பேசாலை
17. செ. ஜெசில்டா, ஞானோதயம்,அமல அன்னை அன்பகம், கீரி.
18. ச. நிறோஜினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
19. லா. கிறேஸ் ஜொஸ்பின், இல 137, தட்டான்குளம்.
20. ச. சந்திரன், புனர்வாழ்வு நிலையம், நேரியகுளம்.
21. எஸ் நித்தியா, கொன்னையன் குடியிருப்பு.
22. சுரேஷ், சவுந்தரம் கடை, உயிலங்குளம்.
23. யி. வசந்தகலா, இல: 51/100 சாந்திபுரம், மன்னார்.
24. எஸ். கிளன்சி பீரிஸ் வளனார் வீதி, தாழ்வுபாடு.
25. ச. கிளேற்றா பீரிஸ், பாடசாலை வீதி, தாழ்வுபாடு.
26. எப். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
27. எஸ். பிரபாகரன் பீரிஸ், பாடசாலை வீதி, தாழ்வுபாடு.
28. ஏ.எம். ஆன் நிவோன்ஷிகா, சிறுக்கண்டல், முருங்கன்.
29. எப். ஜெ. அனுஸ்ரெலா, நறுவிலிக்குளம், வங்காலை.
30. எம்.கே. நிரோஷன், உயிலங்குளம், மன்னார்.
31. எம். ஆன் மதுஷிகா, சிறுக்கண்டல், முருங்கன்.
32. ஜெ. ஸ்ரெபிஹறா, ஜேர்மனி
33. ஜெசிந்தா டி. குருஸ், 36A,காந்தி நகர், திருகோணமலை.
34. இ. சுதர்சினி, போயிட்டி, இளவாலை.
35. ம. றோஜினி, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
36. அ. மேரிகொண்செப்ரா, மடுக்கோயில், மடு.
37. அ. அனுஸ்ரீபன், ஓமந்தை,வவுனியா.
38. ஆர். ஜெ. புனிதகுமாரி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
39. ச. கிஷோ ஷாளினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
40. எஸ். நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை.
41. வ. சியாமளன், மணற்குளம், உயிலங்குளம்.
42. பி.ஜெ. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
43. ஜெ. அருள்டுஷ்மிதன், காத்தான்குளம், வட்டக்கண்டல்.
44. ச. மேரி றெஜீனா, கடைவீதி, நானாட்டான்.
45. டீ.கே. ஜெஸ்மின், தாழ்வுபாடு, மன்னார்.
46. வசந்தி பேரின்பநாயகம், "வசந்தம்", ஆஸ்பத்திரி வீதி.
47. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
48. எம்.எம்.ஜெ. பசில், 41/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
49. வ. லக்சி, மணற்குளம், உயிலங்குளம்.
50. நே. அனோஜா, சிறுக்கண்டல், முருங்கன்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 93 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| து[1] | ய | றா | லு | ம் | மே[2] | ★ | பு | ன் | ர | பே[3] |
| ப | நி[4] | லை | க் | கு | ன் | னி | யோ | சி[5] | ழி | ர |
| ப் | ம் | ட | இ[6] | க் | மை | ★ | ள் | ழ் | ★ | ச் |
| ம | ★ | ★ | ய | கு | யு | வெ[7] | க | க் | ம் | ச |
| கூ[8] | ச் | மூ[9] | ல | க் | ம் | ண் | ம[10] | கை | ன | த் |
| று | ன் | னி | னி | வா[11] | தா | டி | வீ | ர் | ட | தை |
| வெ[12] | ஞ் | சி | ம் | ன | எ[13] | ரி | தி | வ | ந[14] | ★ |
| க[15] | வ | லை | ன | த் | அ[16] | ன் | வ | கை | ப[17] | லி |
| ர் | ய | து[18] | ள | து | ரி | வ | கை | ப[19] | ர | ணை |
| பா | ★ | ணை | ஏ[20] | ணை | ய | சை | கை[21] | ங் | தீ[22] | ட |
| அ[23] | ப | ம் | ★ | இ[24] | ணை | இ[25] | யை | கு | ★ | கூ[26] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.94ற்கான முடிவுகளை 2010ம் ஆண்டு ஜுன் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 04 1989



உதிர்வு 04 05 2009

### அமரர் செல்வி. வேதநாயகம் நோயலின

(பண்டிவிரிச்சான்)

ஆண்டு ஒன்று கடந்ததே எம் இதய இராணியே
நாம் கொண்ட இதயத்துயர் இன்றும் ஆறவில்லையே!
குண்டுச் சத்தங்கள் ஓய்ந்துவிட்டன
உன் சோகம் கேட்டோ – அம்மணி
மீண்டும் எம் வாழ்வில் வசந்தம் நீயின்றி எப்படி?
ஆண்டவன் பாதம் அமர்ந்திட நீ புறப்பட்டாய் - எமைவிட்டு,
மீண்டும் ஊருக்கு எப்படி புறப்படுவோம் உனைவிட்டு,
ஆண்டுகள் கடந்தாலும் எம் இதயத்தில் நீ பூத்திருப்பாய்
ஆண்டவன் கிருபை எமக்காய் என்றும் வேண்டிநிற்பாய்

**உன் நினைவில் என்றும் உயிர்கலந்த**

அப்பா, அம்மா, அண்ணாமார்.
பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில், மடு

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 03 1942



உதிர்வு 13 05 2009

### லீயோ அந்தோனி முத்து

(பத்தாவத்தை, இளவாலை)

**மண்ணுலகில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்!**

ஓடி ஓடி நீங்கள் செய்த அளப்பரிய உதவிகளை ஓயாது நினைத்துக் கலங்குகிறோம். எங்கிருந்தோ வந்த எறிகணை வீச்சினாலே எமை எல்லாம் தவிக்கவிட்டு எங்குதான் சென்றீர்களோ! பயந்து சோர்ந்த வேளையில் மரியன்னை காப்பாவென்று ஆறுதல்கள் கூறினீர்கள். பாதிவழியில் எமை எல்லாம் பரிதவிக்கவிட்டுச் சென்றீர்களே! உள்ளத்தால் நினைத்து உருகுகின்றோம். வான்வீட்டில் சேர்த்தருள பரமனை வேண்டுகின்றோம் எம் இனிய அப்பாவே!

இரங்கல் திருப்பலி 6.30மணிக்கு தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெறும்.

உம் பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 06 1949



உதிர்வு 23 04 2009

### அமரர்.
### திருமதி. அந்தோனிக்கம்மா மீயேஸ் மரியநாயகம் குரூஸ்

(பறப்பாங்கண்டல்)

ஆண்டு ஒன்று ஓடினாலும்
ஆறாது உன்னுடன் வாழ்ந்த நாட்கள்
ஆருயீரே அழியாது என்றும் எமைவிட்டு
"நித்தியத்தில் இவரது ஆன்மா சாந்தியடைவதாக"

**உம் பிரிவால் துயருறும்**

கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 05 1946



உதிர்வு 30 04 2000

### அமரர் திரு. பி. அதிரியாம்பிள்ளை (சிங்கம்)

(கன்னாட்டி, அடம்பன்)

எங்கள் அன்புத் தெய்வமே பப்பா! நீங்கள் எங்களை
விட்டுப் பிரிந்து ஐயிரண்டு ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் அனைவரினதும்
உள்ளங்களில் என்றுமே அகலவில்லையே – பப்பா
உங்கள் அன்புப் பிள்ளைச் செல்வங்களின் இன்பம் கண்டு
மகிழும் நேரம் எம்மைவிட்டுச் சென்ற மாயம்
என்னதான் என்று எமக்குப் புரியவில்லையே பப்பா!
உங்களின் உயர்ந்த குணமும், நிமிர்ந்த நடையும்
நகைச்சுவை மிகுந்த சிரிப்பும், நோயாளர்களைச்
சுகப்படுத்தும் அன்புக் கரங்களும், எம் கண்முன்னே
நிற்கின்றதே உங்களை நினையாத நாளுமில்லை – பப்பா
நீங்கள் எங்களோடு இல்லாவிட்டாலும், உங்கள்
ஆசீர்வாதம் என்றும் எங்களோடு இருக்கும் உங்கள்
பிள்ளைகள் எங்களுக்காக இறைவனிடம் வேண்டுங்கள்
- பப்பா உங்களின் ஆன்மா சாந்தி பெற இறைவனிடம்
தினமும் வேண்டுகின்றோம்.

**உங்கள் பிரிவால் துயருறும்**

அன்பு மனைவி ராசாத்தி, பிள்ளைகள் பிறிடா, றெஜி,
அமலன், (கனடா) நியூட்டா (சுவீஸ்) மருமக்கள்
டோமினிக், தவம், ஜென்சி, (கனடா) றுபேஸ் (சுவீஸ்)
பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 04 1956



உதிர்வு 02 03 2008

### அருட்சகோதரி இக்னேசியா சூசைப்பிள்ளை (பொண்மணி)

**உமநகரி நானாட்டான்**

(அதிபர் யாழ், இளவாலை தி.கு.க.மடம் ம.வித்தியாலயம்)

*"ஆண்டவரின் இல்லத்திற்குப் போவோம் என்ற அழைப்பை நான் கேட்ட போது அகமகிழ்ந்தேன்" சங்:122.*

எங்கள் அன்புத் தங்கா! பொண்மணி என்று பாசத்தோடு கூப்பிடுகின்ற அன்புத் தங்காவுக்கு! இந்த வயதில் இப்படி ஒரு கொடிய நோய் வந்து எங்களிடமிருந்து உங்களை பிரித்துவிட்டதுவே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. இறைவனின் சித்தத்தை ஏற்றுக் கொண்டு அவசரமாக இறைவனடி சேர்ந்து விட்டீர்கள். நாங்கள் உமது முகம் பார்க்காமல் கண்ணீரோடு ஏங்கித் தவிக்கின்றோம். உங்களை நினையாத நேரமில்லை. எங்களுக்காக இறைவன் பாதத்தில் வேண்டிக் கொள்ளுங்கள். தந்தையே இறைவா! எமது சகோதரி இவ்வுலகில் வாழ்ந்த காலங்களில் செய்த குற்றங்களை மன்னித்து உம்முடைய பேரின்ப மோட்சராட்சியத்தில் சேர்த்தருள வேண்டும் என்று தினமும் உம்மைக் கெஞ்சி மன்றாடுகின்றோம்.

**இவர் பிரிவால் துயருறும அன்புச் சகோதர, சகோதரிகள். பிள்ளைகள் குடும்பங்கள், உற்றார் உறவினர்கள்.**

தகவல் : சகோதரி A. ராசாத்தி (கனடா)

## 4ம் பக்க தொடர்ச்சி ..................
## திருநிலைக் குருத்துவம் ..................

எனவே எவரைக் கண்டும் அஞ்சவில்லை, துணிந்து பேசினார். வல்லமையுடன் செயல்பட்டார். தான் விரும்பி, தனக்கு விருப்பமான நேரத்தில், முறையில் தன்னுடைய உடலைக் கையளித்தார்.

இத்தகைய இயேசுவைக் காலத்துள் கொணர அழைக்கப்பட்டிருக்கின்ற குருக்கள் ஒவ்வொருவரும் உள்ளார்ந்த அதிகாரத்தால், வல்லமையால் துணிவால் செயல்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் நாம் காண்பது அநேகருக்கு வெளியரங்க அதிகாரங்கள்தான் இருக்கின்றது. உள்ளார்ந்த வல்லமை வாழ்க்கை முறையால் வருவது. வெளியரங்க அதிகாரம் ஏற்கும் பதவிகளால் வருவது. பணிவிடை பெறவல்ல, பணிவிடை புரியவே வந்த இயேசுவின் சீடர்களுக்கு வெளியரங்க அதிகாரம் அதிகம் தேவை இல்லை. வாழ்வுடன் இணைந்த உள்ளார்ந்த வல்லமையே அதிகம் வேண்டும். குருத்துவத்தில் ஆற்றப்படும் முப்பணிகளில் இக்கருத்தை ஆய்வோம். இறைவாக்குப் பணியை ஆற்றும்பொழுது, இறைவார்த்தையை இன்றைய சூழலுக்கு ஏற்ப புரிந்துகொண்டு, பழைய ஏற்பாட்டு இறைவாக்கினரைப் போன்று துணிந்து ஆற்றுகின்றோமா? திருமுழுக்கு யோவானைப் போன்று விரியன் பாம்புக்குட்டிகளே, வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவர் யார்? மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தந்தை என உள்ளத்தில் சொல்லத் தொடங்காதீர்கள். இக்கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளைத் தோன்றச் செய்யக் கடவுள் வல்லவர் என உங்களுக்குச் சொல்கிறேன்" என்று நம்மால் துணிந்து சொல்ல முடியுமா? அல்லது அடித்துப் பேசுபவர்களிடம் பணிந்து போவதும், பணிந்து போகிறவர்களிடம் அடித்துப் பேசும் ஆட்களாக இருக்கின்றோமா? இறை அருளை மக்களுக்குப் பெற்றுத்தந்து, அவர்களைப் புனிதப்படுத்தும் திரு அருட்சாதனங்களை நிறைவேற்றும்பொழுது, அருட்சாதன வாழ்வு நம் வாழ்வாக மாறுகிறதா? அப்படி இல்லை என்றால் கிறிஸ்துவின் குருத்துவத்தைக் காலத்துள் கொணர முடியாது. ஏனெனில் கிறிஸ்துவே குருவாகவும், பலிப்பொருளாகவும் இருந்தார்.

கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்குவதும், அவைகள் பிளவுபடாமல் ஒன்றித்திருக்க, கட்டிக்காப்பதும் பணிக்குருத்துவத்தின் தலையாய கடமை. தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்" (யோவா 17:11) எனும் நம் நித்திய குருவின் வேண்டுதலை நம் பணியாகக் கொள்கிறோமா? நம்மால் கிறிஸ்தவ குழுமம் ஒன்றிக்கப்படுகிறதா? பிளவுபடுத்தப்படுகிறதா?

**நாம், நாம் விரும்பும் குருத்துவத்தை அல்ல, கிறிஸ்துவின் குருத்துவத்தைக் காலத்துள் கொணர வேண்டும்.**

## 1ம் பக்க தொடர்ச்சி......... சலேசியன் சபை முதல்வர்...........

இப்பொழுதே நிலையான, சரியான தீர்மான முடிவுகளை எடுங்கள் என்று கூறி நின்றார். வவுனியா தொன்பொஸ்கோ மாணவிகளையும் அவர்களை பராமரிக்கும் சலேசியன் சகோதரிகளையும் அவர் சந்தித்துச் சென்றார்.

முருங்கன், வவுனியா டொன்பொஸ்கோ நிலையத்தின் மாணவ மாணவிகள், பணியாளர்களை சந்திப்பதோடு போர் பாதிப்புக்குள்ளான மாணவ மாணவியரின் நலன்விசாரித்து அவர்கள்பாலான தனது அக்கறையை எடுத்தியம்பும் நல்லெண்ண பயணமாகவே சலேசியன் சபை முதல்வர் அருட்பணி பாஸ்குலால் சாலெஸ்டன், சலேசியன் சபையின் துணை முதல்வர் அருட்பணி. பிறகொலின் அதியானோ, தென்னாசிய மாகாண முதல்வர் அருட்பணி. மரிய ஆரோக்கியம், இலங்கை மாகாண முதல்வர் அருட்பணி. கியூமர் பின்ரோ ஆகியோரும் ஏனைய பல சலேசியன் சபை குருக்களும் இணைந்து இவ்விஜயத்தை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னா


# சிறுவர் பொழிவு

## விவிலிய சிறுகதை

## ஈசாக்கு – கீழ்ப்படிவுள்ள மகன்

கானான் ஊரில் ஆபிரகாம் என்னும் ஒரு மனிதர் வாழ்ந்தார். ஆபிரகாமும் அவர் மனைவி சாராளும் கடவுளை அதிகமாய் நேசித்தார்கள். அவர்களிருவரும் மிகவும் வயது சென்றவர்களாயிருந்தனர். அவர்களுக்கு பிள்ளைகளில்லாதிருந்தது. சொந்த பிள்ளையொன்று தங்களுக்கு இருக்க வேண்டுமென ஆவலாய் இருந்தார்கள்.

கடவுள் பேரில் ஆபிரகாம் நம்பிக்கையும் அன்பும் வைத்திருந்தபடியால் அவர் ஆபிரகாமை ஏற்றுக் கொண்டார். அவர்கள் வயது சென்றவர்களாயிருந்தாலும் சாராளுக்கு ஒரு மகனை கொடுப்பதாக கடவுள் ஆபிரகாமுக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தார். ஆனால் சாராள் தனக்கு 80 வயதானபடியால் இதனை கேட்டவுடன் நகைத்தாள்.

பல வருடங்கள் கடந்தது. கடவுள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினார். கடவுள் சாராளை ஆசீர்வதித்தார். அவள் ஆபிரகாமுக்கு ஒரு மகனைப் பெற்றாள். பிள்ளை பிறந்தபோது ஆபிராம் நூறு வயதாயிருந்தார். ஆபிரகாம் அவனுக்கு "ஈசாக்கு" என பெயரிட்டார். அதற்கு நகைப்பு என்று அர்த்தமாகும். சாராள் "கடவுள் எனக்கு மகிழ்ச்சியையும் நகைப்பையும் தந்தார். இதனை கேட்கும் யாவரும் என்னோடேகூட சிரிப்பார்கள்" என்று கூறினாள்.

ஆபிரகாம் தன் பிள்ளையை பார்க்கும் போதெல்லாம் கடவுளுடைய அன்பை நினைத்திருப்பார். ஈசாக்கு தனது பெற்றோருக்கு பிரியமானவனாயிருந்தான்.

ஒரு நாள் மறுபடியும் கடவுள் ஆபிரகாமுடன் பேசினார். "உன் மகனை, நீ அன்பு கூறும் ஒரே மகனான ஈசாக்கை அழைத்துக்கொண்டு மோரியா நிலப்பகுதிக்கு போ, அங்கு நான் உனக்கு காட்டும் மலையின் மேல் அவனை எனக்கு எரிபலியாக செலுத்து".

மறுநாள் அதிகாலையில் ஆபிரகாம், கழுதைக்கு சேணமிட்டு, இரண்டு வேலைக்காரரையும், ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, கடவுள் தனக்கு சொன்ன இடத்திற்குப் புறப்பட்டுப் போனார்.

இருவரும் கூடிப்போகும்போது ஈசாக்கு ஆபிரகாமை நோக்கி: "என் தகப்பனே, நீங்கள் நெருப்பையும், விறகுகட்டையையும் வைத்திருக்கிறீர்கள், ஆனால் எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே? என்றான். அதற்கு ஆபிரகாம்: "என் மகனே, கடவுள் ஆட்டுக்குட்டியைத் தருவார்" என்றார். அவர்கள் மோரியாவுக்கு வந்ததும், அங்கே ஆபிரகாம் ஒரு பலிப்பீடத்தைக் கட்டி, விறகுக் கட்டைகள் மேல் ஈசாக்கை கிடத்தினார். பின் அவனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டி கத்தியை எடுத்தார். அப்பொழுது கடவுளுடைய தூதர் வானத்திலிருந்து "ஆபிரகாமே பிள்ளையின் மேல் உன் கையை வைக்காதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே, நீ அவனை உன் ஒரே புதல்வன் என்றும் பாராமல் எனக்காக பலியிட துணிந்ததால் நீ கடவுளுக்கு அஞ்சுபவனென்றும் கீழ்ப்படிந்தவன் என்றும் அறிந்து கொண்டேன்" என்றார்.

ஆபிரகாம் சுற்றும் முற்றும் பார்த்த போது, புதரிலே தன் கொம்புகள் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கிடாயைக் கண்டார். அப்போது ஆபிரகாம் கிடாயைப் பிடித்து, அதனை தன் மகனுக்குப் பதிலாக எரிபலியிட்டார்.

### பாலகரே! உங்கள் கைவண்ணத்தை இங்கே காட்டுங்கள்



சிறுகதைக்கு பொருத்தமான இப் படத்தை உங்கள் கலைநயத்திற்கேற்ப நிறந்தீட்டி மகிழுங்கள்

# கவிதைப் பூக்கள்

## புகை



ஒவ்வொரு முறையும்
புகையை
இழுக்கும் போதும்
வெளியே நீ தள்ளுவது
ஆயுளின் நாட்களை

நீ
உன்னாலேயே
உயிரோடு எரிக்கப்படுவது
உனக்கு புரிகிறதா?

புகைத்தல் பொருட்கள்
புற்றுநோயெனும்
புற்றினை கட்டிடும்
கறையான் வர்க்கங்கள்

எதற்கும் பயன்படாத அந்த
எச்சம் போலவே நீயும்

உள்ளிழுக்கும் புகை
உடலுக்கு பகை
கையிலேயே
கயவனை வைத்திராதே
அவன் உன்
கழுத்தறுப்பான் என்பதை
மறந்துவிடாதே

யே. புரட்சி

## ஆலமரமும் சிட்டுக்குருவியும்




சிட்டுக் குருவியே சிட்டுக்குருவியே
சிறகடித்தாயோ...!
சிறிய இனப் பறவை நீயும்
சிறகடித்தாயோ...!
பல திசையும் சென்று வந்த
பறவையல்லவா நீ
பாரினிலும் வாழுகின்ற
சிட்டுக் குருவியல்லவா
பாடுபட்டுக் கட்டிவந்த
குருவிக் கூட்டை
புயல் காற்று மழையடித்துக்
கவிழ்த்ததேனோ...!
நீ வாழ்ந்த ஆலமரம்
பசுமையல்லவா – அதன்
அரவணைப்பில் அனைத்துயிரும்
வாழ்ந்ததல்லவா....!
கிளைகளெல்லாம் போறைவிழ
இலைகளெல்லாம் உதிர்ந்ததேனோ...?
வாழ்ந்து வந்த மரக்கிளைகள்
தரையில் வீழ்ந்து கிடக்க
சருகு கூட சாம்பலாக கருகிக்கிடக்க
தீனி தின்ற சோலையெல்லாம்
தீயில் வேகிக்கிடக்க
ஆலமரம் சரிந்ததென்று
சிட்டுக்குருவியினம் கலைந்ததேனோ...?
இன்று எண்ணித்தவிக்கின்றனர்
ஏனிந்த வாழ்வு எமக்கு வந்ததென்று
எம்மை மீட்டிட ஒருவர் வருவாரா....?
என்ற ஏக்கத்துடன் பார்த்து இருக்கும்
சிட்டுக்குருவி இனம் - மீண்டும்
விழுதுகளில் ஆலமரம் தழைத்திடுமா...?
நாம் வாழ்ந்த மரம் நோக்கிச் சென்றிடுவோமா?



ம. வசீகரன்

## பாடும் பலனும்



பாடது பட்டார் இயேசு
பலனென உயிர்க்கலானார்
ஈடிலா வெற்றியாளர்
இறையவன் மகனேயாவார்
நாடெலாம் வணங்கும்; அந்த
நாற்றிசை பேசும் எங்கும்
ஏடெலாம் எழுதும்; போற்றும்
இணையிதற் குண்டுமாமோ?

சொற்படி உயிர்த்தார் இயேசு
சூதர்கள் காத்த போதும்
அற்புதம் அதுவேயாகும்
அதற்கொரு விளக்கம் இல்லை
பொற்புறு வடிவினோடு
பூரண ஒளியினோடு
கொற்றவன் யேசு, வெற்றிக்
கொடியது பிடிக்கலானார்



பளிங் கெனத் தூய்மையாக
பாவத்தை முற்றாய் விட்டு
துலங்குதல் 'உயிர்த்தல்' ஆகும்
சுட்ட நல் தங்கம் போல
களங்கமே அற்ற இயேசு
கடுந்துயர் ஊடாய்ச் சென்று
உலகதன் 'வெளிச்சம்' ஆனார்
உண்மையை உணர்ந்து கொள்வோம்

சிறந்ததோர் காட்டு ஆகும்
யேசுவின் வாழ்க்கை ஏடு
பிறந்தவர் எல்லாம் இந்தப்
பேரொளி வழியிற் சென்றால்
நிரந்தர அமைதி காண்பார்
நித்திய வாழ்வும் உண்டு
இறந்தவர் உயிர்ப்பார்; உண்மை
இயேசுவே சாட்சியானார்.

வாகரை வாணன்

## கொஞ்சம் சிரிங்க

**டாக்டர்:** உன் கணவன் இரத்த வாந்தி எடுக்கும் வரைக்கும் என்ன பண்ணீட்டு இருந்த நீ
**மனைவி:** அடிச்சுட்டு இருந்த டாக்டர்

************

**விவேக்:** என்னாது என்கிட்ட 601.00 வாங்கிட்டு இப்ப 106.00 தந்த என்னா அர்த்தமிண்டு கேட்கிறன்
**அஜித்:** சொன்னபடி திருப்பி தந்திட்டன்ல

************

**மனைவி:** மதியம் ஒரு மணிக்கு மிஸ் கோல் கொடுக்கச் சொல்லுறீங்களே எதுக்கு?
**கணவன்:** எங்க ஆபிஸ்சுல சாப்பாட்டுக்கு யாரும் என்னை எழுப்பமாட்டேங்கிறாங்க

************

**நேஸ்:** டாக்டர் ஆபிரேஷன் முடிஞ்சுதா? பேஷன்ட்டைக் கூட்டிக்கிட்டு போர்லாமன்னு கேக்குறாங்க
**டாக்டர்:** எடுத்துக்கிட்டு போகச் சொல்லு

அ. வேஜின் நிலானி
மன்/ நானாட்டான் ம. வி. தரம் 7B

## சிந்திக்க நேரம் ஒதுக்குங்கள்

இன்று நீ சொல்லும் பொய்யானது நாளையும் உன்னைப் பொய் சொல்ல வைக்கும்

தீய நண்பர்களை கொண்டிருப்பதைவிட, நண்பர்கள் இன்றி இருப்பது மேல்

எதிர்காலத்தை நினைத்து அஞ்சாதே, இறந்த காலத்தை நினைத்து வருந்தாதே!

இறைவனைத் தவிர வேறு எதிலும் மிகுந்த பற்று வைக்கக் கூடாது

இலட்சியம் இல்லாத மனித வாழ்வு ஆழ்கடலில் துடுப்பு இல்லாத படகு போன்றது

மனிதன் மனிதனாக வாழ்வதற்கும், வாழ்வில் அவன் முன்னேறுவதற்கும் அவனுடைய முழு முயற்சியே காரணம்

ம.காமலின்சௌமியா குருஸ்
அரிப்பு, சிலாபத்துறை. தரம் 11


இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 12, டாம் வீதி, 232ம் இலக்கத்திலுள்ள மெக்லின் பிரைவேட் லிமிட்டட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது